LC
N45
101430.

29 DEC 1946

பரமபதி துணை.

பதினெண் சித்தர்களில்

தெய்வத்தன்மை பொருந்திய

# போகர் கற்பம் 300.

அரும்பத வுரையுடன்

---

மதுரை வடக்குமாசி வீதி, சித்த வைத்தியம்,

ஐ. வன்னியக் கோனாரவர்கள் கொடுத்த

ஏட்டுப்பிரதியின்படி

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ராம.

## குருசாமிக்கோனார் சன்

C. இராமசாமிக்கோன்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசி வீதி குருசாமிக் கோனார் சந்து

ஸ்ரீராமச்சந்திர விலாசம் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

P. I. C. No M D 104 - 16—10—45. 400 Copies.

விலை ] 1945 [ ரூ. 1—8—0

இரண்டாம் பதிப்பு.

101430

உ

பரமபதி துணை.

## ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் ததிபர்களுக்கும் புத்தக வியாபாரிகளுக்கும் இன்னு மற்றுமுள்ளவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:-

இந்தப் போகர் கற்பம் என்னுமிச் சாஸ்திரம் ஓலையேட்டுச் சுவடியி லிருந்ததைப் போதுமான திரவியச் செலவு செய்து அச்சிட்டு என்னால் கெவர்மெண்ட் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இச்சாஸ்திரத்தைப் பிறர் எவ்விதத்திலும் அச்சிடக்கூடா தென்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்படிக்கு.

G. இராமசாமிக்கோன்

புத்தகஷாப், புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதி துணை.

பதினெண் சித்தர்களில்

தெய்வத்தன்மை பொருந்திய

# போகர் கற்பம் 300.

காப்பு

தானான காயசித்தி சொல்லக்கேளு
ஜன்காதி நால்வருட பாதம்போற்றி
பானான பாட்டர்திரு மூலநாயன்
பதமெந்தன் சிரசில்வைத்துப் பணிந்துபோற்றி
கானான காலாங்கி அய்யர்பதம்போற்றி
கற்பதனின் வகைகளெல்லாங் கருதித்தின்று
தேனான சித்திபெற்ற படியேசொன்னேன்
சிதைவில்லாக் கற்பமுண்டு யோகம்பாரே.

பத்தியம்.

யோகமாம் புளியுப்பு யெண்ணெய்சுண்ணம்
உரிசையா ¶ மாங்கிஷங்கள் மச்சமாகா
மோகமா மோரோடு கடுகுஉள்ளி
முதிரான காரமொடு பெருங்காயந்தான்
போகமாய்ப் பெண்ணினுட புணர்ச்சியோடு
போரான நித்திரையுஞ் சோம்பல்தள்ளி
வாகமாம் வாசிதனை மறித்துக்கொண்டு
மறவாம லிரவுபகல் மனதுஉன்னே.

உன்னியே பாலோடு நெய்யைக்கூட்டு
ஒருசேரைச் சமைத்துண்டு ஒருபோதய்யா
பன்னியே ராமாறு பாலைக்கொள்ளு
பணியாரஞ் சிறுபயறு பழமுந்தேனும்
குன்னியே கோரக்கர் கற்பமாகும்
கொடிதான வஸ்துவொடு குக்கிடந்தான்
வென்னியே வெள்ளாடு மறைமானுகும்
விதமான காடைகவு தாரியாமே.

¶ மாங்கிஷம்—மாமிஷம்.

ஆமென்ற ‡ வாசனையா லுப்புத்தேடில்
அழுத்தமாய்க் கட்டியதோ ருப்புக்கூட்டு
போமென்ற புளிமேலே ஆசையானால்
புளியாரை புளியரணை சியக்காய்க்கொழுந்து
நேமென்ற நெல்லிக்காய் பசலிக்கீரை
நித்தியமாய்க் கூட்டியே கற்பமுண்ணு
ஆமென்ற பயறோடு யிளநீருங்கரும்பும்
ஆகாது குளிர்ந்ததண்ணீர் தானுங்காணே. (4)

## தாம்பூலச் சுண்ணம்.

காணவே தாம்பூலந் தின்பதற்குக்
கற்பூரச் சிலைசுண்ண முத்துச்சுண்ணம்
பாணவே பவளத்தைச் சுண்ணம்பண்ணு
பரிச்சுண்ண மண்டத்தின் சுண்ணமாகும்
தாணவே தலைமுழுக்கு பசுவின்நெய்தான்
தடவியே பசும்பயறு அரப்பாய்ப்பண்ணி
ஊணவே பட்சத்துக் கொருக்கால்தானும்
உத்தமனே முழுகுதற்கு உண்மைகேளே. (5)

## முழுக்கு விபரம்.

உண்மையாய் மிளகோடு மஞ்சள்நெல்லி
உத்தமமாங் கடுக்காயும் வேப்பம்வித்து
தண்மையாய்ச் சமமாக நிறுத்துக்கொண்டு
தனித்துநின்ற ஆவின்பால் விட்டுஆட்டி
திண்மையாய்த் தலைதனிலே தேய்த்துவைத்து
சிறக்கவே ஒருசாம மானபின்பு
வெண்மையாய் வெந்நீரில் முழுகிப்போடு
விரைந்ததோர் பட்சத்துக் கொருக்கால்தானே. (6)

## வழலை வாங்க.

தானான காலையிலே வழலைவாங்க
சாதகமாய்க் கரிசாலைச் சாற்றினோடு
ஆனான ஆவின்நெய் சமன்கலந்து
§ அங்குஷ்ட விரல்தனிலே தோய்த்துக்கொண்டு
ஊனான உண்ணாக்கின் மேலேசுத்த
ஓங்கியதோர் சிரசில்நின்ற கபந்தான்வீழும்
கானான சங்கிலிபோல் கபந்தான் வீழ்ந்தால்
காயசித்தி யோகசித்தி கடிசிலாச்சே. (7)

‡ வாசனை—மணம். § அங்குஷ்டம்—பெருவிரல்



கடிசான குஞ்சனத்தின் கருவைக்கேளு
கையான தர்ச்சனியாம் விரல்தன்னுள்ளே
எடிசான யேரண்டத் தெண்ணெய்தோய்த்து
இடசாரி வலசாரி திருப்புநூறு
படிசான பழமலங்கள் கழன்றுபோகும்
பறவைபோல் காலையுன்னிப் பண்பாய்வாங்கு
கெடிசான வாமமெல்லாங் கழன்றுபோகும்
நிசயோக சித்தியொடு காயசித்தே (8)

## அஞ்சனம்.

சித்தாகக் கண்ணுக்கு அஞ்சனத்தைக்கேளு
செங்கடுக்காய் சுட்டகரி விராகனொன்று
துத்தாகத் துருசுதன்னைச் சிலைக்குள்வைத்து
சிதறாமல் சுட்டபின்பு தூளைவாங்கி
வத்தாக விராகனிடை நிறுத்துக்கொண்டு
மடையன்தான் விராகனிடை அஞ்சனமப்படியே
குத்தாக வெண்ணெய்யது பலமும்போட்டுக்
கொட்டியே கிண்ணியிலே காவிச்செம்பே. (9)

செம்பாலே அரைத்திட்டு வெண்ணெய்போட்டு
திறமாங்கோ ரோசனைதான் விராகனிட்டு
நம்பாலே நால்சாம மரைத்துமைப்போல்
நல்மாட்டின் கொம்பென்ற சிமிழில்வாங்கு
அம்பாலே அக்திசக்தி எள்ளுப்போலே
அழகாகக் கண்ணிலிட ஒளியோமீறும்
உம்பாலே உள்பார்வை ஒளியுங்காணும்
ஓராண்டு யிப்படித்தான் உகந்துபோடே. (10)

## ஆக்கிராணம்.

போடவே மூக்குக்குப் பொடியைக்கேளு
பெரிதான ‡ வரச்சுண்டி வேரைவாங்கி
நீடவே நிழலுலர்த்திப் பொடியாய்ப்பண்ணி
நேரிசையாய்ச் சீலைவடி கட்டிக்கொண்டு
தேடவே குடுக்கைதனி லடைத்துக்கொண்டு
சிறிதாக நுனிவிரலிற் பிடித்துக்கொண்டு
வாடவே வாசியோ டேத்திவாங்கில்
மவுனமாஞ் சிகாரத்தால் ரேசிப்பாயே. (11)

‡ வரச்சுண்டி—நெட்டிக்கொடி

ரேசித்தால் நிராதாரத் தடைப்புகுங்கி
நிர்மலமாம் ஆதித்தன் ஒளியோமீறும்
தூசித்தால் சுழிமுனைதான் கெட்டிட்டேறும்
தூசான அழுக்கெல்லாஞ் சித்திவீழும்
காசித்த கபாலமது கெட்டியாகும்
கண்ணொளிதான், கேசரத்தில் நின்றுபார்க்கில்
ஆசித்த ‡அடுக்காறும் உருவிக்காணும்
அந்தரத்தி னொளியெல்லாம் அருகுமாமே. (12)

## வயதுக்குத்தக்கபடி.

ஆமென்ற வயதங்கே யிருபதாகில்
ஆச்சரியங் கடுக்காயை யிருபதுநாள்கொள்ளு
மூமென்ற வயதங்கே முப்பதாகில்
முயற்சியா யிருபத்தி ஐந்துநாட்கொள்
நாமென்ற வயதங்க நாற்பதாகில்
நலமாக முப்பதுநாள் கடுக்காய்கொள்ளு
தேமென்ற வயதங்கே ஐம்பதானால்
திறமாக முப்பத்து ஐந்துநாளே. (13)

நாளான வயதங்கே அறுபதாகில்
நாற்பதுநாள் கடுக்காயை உண்டுவாரீ
ஏழான வயதங்கே யெழுபதாகில்
ஏத்தமாய் நாற்பத்து ஐந்துநாட்கொள்
தாளான வயதங்கே எண்பதாகில்
சதிராக ஐம்பதுநாள் கடுக்காய்கொள்ளு
தேளான யெண்பதின்மேல் சித்தியில்லை
திறமறிந்து யிப்படியே கற்பங்கொள்ளே. (14)

## கடுக்கா யுற்பத்தி.

கொள்ளவே கடுக்காயி னுற்பத்திகேளு
கூறாத ‡விசையனுரோ கணியுமாகும்
புள்ளவே பிருதிவியும் அமுர்தசீவந்தி
போரான திருவிரதை அபயன்தானும்
அள்ளவே அமுர்தந்தான் கடைந்தபின்பு
ஆழியா னமார்களுக் கமுர்தமீய்ந்து
[illegible]ணவே கைதனையே உதறும்போது
உற்றதுளி மண்ணில்விழ மரமுமாச்சே. (15)





மரமாகி யேழுவகைப் பேதமாச்சு
மகத்தான விசையனென்ற கடுக்காய்சூரணித்து
அரமாகி வெருகடிதான் அமுரிதன்னில்
அளாவியே கொண்டாக்கால் வாதம்போகும்
புரமாகிப் பேய்ச்சுரைக்காய் போன்றிருக்கும்
பெரிதான வாதமகா சித்தியாகும்
சுரமாகி நாற்பதுநாள் கொண்டிட்டாக்கால்
நாதமாம் வாதமது நலங்கிப்போமே. (16)

போமென்ற ரோகணியின் பிறவிகேளும்
பெரிதாகு மொன்றினால் கீத்துமாகும்
காமென்ற காய்துவராங் கணக்கைப்பார்த்து
கலந்திடித்துச் சூரணமாய்ச் செய்துகொண்டு
ஆமென்ற அமுரிதனில் குழப்பிக்கொண்டு
அதிகமாஞ் சீதமறுங் கிருமிநாசம்
வாமென்ற மண்டலந்தான் கொண்டால்கேளு
† வன்னியே மிகத்துலங்கி மருவும்பாரே. (17)

மருவியே பிருதிவியின் குணத்தைக்கேளு
மருவுகின்ற மேல்தொலிதான் சிறுத்துக்காணும்
தருவவே சதைதானும் பருத்திருக்கும்
தனித்திட்ட கடுக்காயைச் சூரணித்து
அருவவே அமுரியினால் கலக்கிக்கொள்ளு
ஆமமெல்லாங் கழன்றுபோங் கிருமிவீழும்
நருவவே நாற்பதுநாள் கொண்டாயானால்
நாடிசுத்தி தேகசுத்தி யாகும்நாடே. (18)

நாடவே அமிர்தையெனுங் கடுக்காய்க்குத்தான்
நலத்தசதை பெற்றிருக்கும் நிறமுமஞ்சள்
வாடவே காலநோய் தனையகற்றும்
மருவியிதை யிடித்துநன்றாய்ச் சூர்ணமேசெய்து
ஆடவே அமுரிதனில் கலக்கிக்கொள்ள
அடைவாக மண்டலந்தா னுண்டாயானால்
தாடவே சதையிலுள்ள ரோகமெல்லாம்
சாடுமே சுயம்பாட வாக்குமாமே. (19)

வாக்கான சீவந்திக் கடுக்காய்க்குத்தான்
மகத்தான யேமத்தின் வர்ணமாகும்
ஏக்கான திதையிடித்துச் சூரணமேசெய்து
ஏத்தமா மமுரிதனை முன்பின் தள்ளி
வாக்கான மண்டலந்தான் கொண்டுவந்தால்
மகத்தான மூலமது வெளியாய்த்தோணும்
நீக்கான வியாதியெல்லாம் நீறாய்ப்போகும்
நிலவரமாய்ச் சடந்தானும் நிற்குந்தானே. (20)

நிக்குமே திருவிருதை யெனுங்கடுக்காய்
நிறந்தானும் பஞ்சவர்ண மாயிருக்கும்
தக்குமே யிடித்துநன்றாய்ச் சூரணமேசெய்து
தாக்கான சீலைவடி கொண்டுதானும்
நக்குமே மண்டலந்தான் அமுரிதன்னில்
நலமாக வெருகடிதான் கொண்டுவாநீ
தக்குமே சடந்தானும் கற்பாந்தகாலம்
தனித்துநின்ற வாதபித்த சிலேத்துமம்போமே. (21)

போமென்ற அபையனாங் கடுக்காய்தானும்
பெரிதான கருப்புவர்ண மாயிருக்கும்
ஆமென்ற யிதையிடித்து அரித்துக்கொண்டு
அமுரிதனில் மண்டலந்தான் கொண்டாயானால்
வேமென்ற ‡ மும்மலமுங் களிம்புபோகும்
விரைந்துநின்ற நாடியெல்லா முறுக்குமேறும்
ஏமென்ற யெண்பதுக்குள் கொள்ளலாகும்
ஏத்தமாம் அபையனென்ற கடுக்காய்தானே. (22)

தானென்ற கருங்கடுக்காய் கையிருக்கில்
சகலபூ தப்பிரேதஞ் சங்கைசெய்யும்
ஆனென்ற அனேகநாள் சடமிருத்தி
ஆயுசுதான் மிகவுண்டா மழுந்துந்தேகம்
தேனென்ற சிவன்தானும் நிருத்தஞ்செய்வார்
சித்தியாய் சாஸ்வதந்தான் சிறக்குந்தேகம்
பானென்ற சீலனாய்ப் பத்தியுண்டாய்
பகர்ந்ததோர் கடுக்காயின் அபையநன்றே. (23)

‡ மும்மலம்—நீர், மலம், கபம்.



## கடுக்காய் உற்பத்தி.

நன்றான விசையனென்ற கடுக்காய்தானும்
கலமான விந்தியதேசந் துற்பத்தி
கன்றான ரோகணி யெனுங்கடுக்காய்
கன்னியா குமரிதனி லுற்பத்தியாகும்
பொன்னான பிருதிவிதான் சௌராஷ்டதேசம்
பேரான அமுர்தந்தான் காசியாகும்
தின்னான சீவந்தி திருவிரதைரெண்டும்
செயலான மச்சியதே சந்தானென்றே. (24)

என்றான அபையனென்ற கடுக்காய்தானும்
எழிலான தேசத்தில் அபூர்வமாய்க்கிடைக்கும்
கன்றான கருங்கடுக்காய் தெரிசித்தாக்கால்
காசிதனைத் தெரிசித்த பலனுக்கொக்கும்
பன்றான பரிசிக்கில் சிவசிந்தையாகும்
பண்பான ‡ ஆக்ராணம் பண்ணினாக்கால்
தன்னான சடத்திலுள்ள கோயெல்லாம்போகும்
தாயான மனோன்மணியுந் தயைசெய்வாளே. (25)

## கற்பவிதி.

தயையான கருங்கடுக்காய் கிடையாவிட்டால்
சமரசமாம் பொற்கடுக்காய் தூளாய்ப்பண்ணி
அயையான ஆனிமுதல் ஆடிரெண்டும்
அரிதான வெல்லத்தி னுடனேகொள்ளு
பியையான ஆவணியுங் கன்னிதானும்
பெரிதான யிந்துப்பு காலவாசிகூட்டி
குயையான அமுரிதனில் கலக்கிக்கொண்டால்
கொடியதொரு ஆழமெல்லாங் கழன்றுபோமே. (26)

கழன்றுபோம் அற்பிசிக்குங் கார்த்திகைக்கும்
கலந்துமே சர்க்கரையி னூடேகொள்ளு
மழன்றுபோம் மார்கழியுந் தைக்கித்தானும்
மாசற்ற சுக்குகிஷா யத்திற்கொள்ளு.
தழன்றுபோம் மாசிபங் குனிக்குத்தானும்
சமரசமா யமுரிதனில் கலக்கிக்கொள்ளு
திழன்றுபோஞ் சித்திரைவை காசிக்குத்தான்
சிறுகுறிஞ்சி தேன்தன்னில் திரட்டியுண்ணே. (27)

‡ ஆக்ராணம்—முகர்தல்

## செங்கற்றாழை.

உண்டுமே கடுக்காயைத் தள்ளிப்பின்பு
உவப்பன சிவப்பாங் கற்றாழைதன்னை
மண்டுமே மண்டலந்தான் கொண்டாயானால்
மகத்தான ‡திரிதோஷஞ் சாடிப்போகும்
பூண்டுமே முன்கொண்ட உப்புயெல்லாம்
முறிந்துமே சடத்தில்நில்லா வெளியிற்போகும்
கண்டுமே சிவப்பான கற்றாழைதன்னை
கருதியே தின்றக்கால் சாவுபொய்யே. (28)

பொய்யாகப் போகாமல் கற்றாழைதன்னை
பொருந்தியே சோறெடுத்துக் கடுக்காய்த்தூளை
கையாரக் கலக்கியே தெளிவிறுத்து
கரண்டிக்குள் ரசம்வைத்துச் சுருக்குப்போடு
மெய்யாக ரசம்கட்டி மணியுமாகும்
மிரளாதே காரமிட்டு உருக்கிப்பாரு
துய்யாச்சு சுப்பிரமாய்க் கண்விட்டாடும்
துணையாக நாவிலொன்று தங்கம்போடே. (29)

## நாகக்கட்டு.

போடவே நாகமது பலந்தானொன்று
பொரிகாரம் பலம்ரெண்டு சாரமொன்று
நாடவே நாகத்தை உருக்கிக்கொண்டு
நற்சிவப்பாங் கற்றாழைச் சாற்றில்சாய்ப்பாய்
மாடவே பொரிகாரம் சாரம்ரெண்டும்
வலமாகப் பொடிபண்ணி மேலேதூவு
ஈடவே யிப்படித்தான் யிருபத்தொன்று
எழிலாகச் சாய்த்திடவே கட்டிப்போமே. (30)

சாய்க்கவே தங்கமது ரவியுமாகும்
தாதுவென்ற அறுபத்து நாலுங்கட்டும்
வாய்க்கவே உபரசங்கள் சத்துயாகும்
மருவிநின்ற நாகமது உருகும்போது
காய்க்கவே கனகமது கால்தான்போடு
கட்டுகின்ற நாகமப் படியேபோடு
தேய்க்கவே தாளகமுங் கெந்தியொடுசிலையும்
சிறப்பான வெங்காரப் பொடியுங்காலே. (31)

‡ திரிதோஷம்—வாதம், பித்தம், சிலேட்டுமம்.



நாலோடு நாலையுந்தான் கற்றாழைநீரில்
கலந்தரைத்து உண்டைபண்ணிக் காயவைத்து
சாலோடு சரக்கெல்லா முருகும்போது
தாக்கிடுவாய் ஒவ்வொன்று யுண்டைதன்னை
நாலோடு தயிலத்தை உண்டைவாங்கி
நலமான களங்காகும் நூற்றுக்கொன்று
வேலோடு வெள்ளியிலே கொடுத்தாயானால்
விரைந்துநின்ற மாத்ததுவு மெட்டதாமே. (32)

எட்டாத §செங்குமரி கிடையாவிட்டால்
எத்தமாம் வரிக்குமரிச் சோறுதானும்
தட்டாத சதுரக்கள்ளிக் காய்தானைந்து
தனித்துரெண்டும் அமுரியிலே கரைத்துக்கொள்ளு
வெட்டாத மண்டலந்தான் விரைந்துகொள்ளு
வியந்துடம்பில் நின்றபுளி வீழ்ந்தேபோகும்
கட்டாக முன்சொன்ன கற்பந்தானும்
காலமே கொண்டபின்பு கருதிக்கேளே. (33)

## மயக்கம் தியக்கம்மாறக்கஷாயம்

கருதியே கருவேம்பு முருங்கையீர்க்கு
கற்கண்டு சுக்கோடு நாலுதானும்
அருதியே அரைப்பலந்தா னிறுத்துக்கொண்டு
அறிந்துமே ரெண்டீர்க்கும் வறுத்துப்போடு
கருதியே ரெண்டையுந்தா னறுக்கிக்கொண்டு
நல்லதண்ணீர் தனில்காய்ச்சி நாலிலொன்றாய்
மருதியே மாலையிலே கொள்ளவேதான்
மயக்கமொடு தியக்கங்கள் மாறிப்போமே (34)

மாறியே கடுக்காயை யுண்ணும்போது
மறவாமல் வழலைதனைத் தினமும்வாங்கு
காறியே காயசித்தி யென்பதுக்குள்நன்று
கைகடந்தா லாகாது கடினமெத்த
ஆறியே கடுக்காய்க்கு மலம்போகாட்டால்
அரகரா வாதபித்த தேகமாகும்
தேறியே சிலபேர்க்கு போகாமற்சிக்கும்
திறமாகக் கழியாவிட்டால் சித்தியில்லைதானே. (35)

§ செங்குமரி—சிவப்புக்கற்றாழை.

### சிவதைச் சூரணம்.

தானான சிவதைதனைப் பாலிற்போட்டு
தனித்தனியே அடுப்பேற்றி யெரித்துக்கொண்டு
வானான துலர்த்தியே யிடித்துநைய
உறுசீலை வடிகொண்டு சூரணமேசெய்து
கானான கடுக்காய்த்தூள் ரெண்டுபங்கு
கலர்சிவதைச் சூரணந்தான் ஓர்பங்காக்கி
கூனான அமுரியிலே குளப்பிக்கொள்ளு
கூட்டோடே ‡ ஆமமெல்லாங் கழன்றுபோமே. (36)

### மிளகு கற்பம்.

பேரமென்றே யிதைவிட்டுக் கற்பங்கேளு
புகழாக ஐந்தைந்தாய் மிளகையேற்றி
ஏமென்று யிருபதுநாள் கொண்டுவாநீ
இறக்கியே அமுரியிலே யிருபதுநாள்கொள்ளு
வாமென்ற மாலையிலே அறுகம்வேரு
வண்மையாய் ஒருபலந்தா னிடித்துநைய
வேமென்ற மிளகதுதா னிருபத்தைந்து
மிக்கான தண்ணீரி லெட்டிலொன்றாய்க் காய்ச்சி
பாமென்று யிறக்கையிலே பாக்களவுவெண்ணெய்
பாலித்துப் பாங்காகக் கொண்டிடாயே. (37)

### மலங் கழறச் சூரணம்.

கொண்டிடுவாய் மண்டலந்தான் குவிந்தபின்பு
குஞ்சரத்து மலங்களெல்லாங் கழற்றுதற்கு
முண்டிடுவாய் முன்சொன்ன படியேதிரு
முகிந்தபின்பு மிளகுண்ட பின்புகேளு
கண்டிடுவாய் கடுக்காய்தான் பலமும்நாலு
கருதியதோர் திப்பிலியுஞ் சுக்கோடேக்க
ஒண்டிடுவர் சீரகமும் ஓமம்யிந்து
உருக்கியாம் ¶ நறுக்கென்ற மூலந்தானே. (38)

மூலந்தான் வகையொன்று பலந்தான்கூட்டி
முனிந்திடித்துக் கடுக்காயின் விரையைத்தள்ளி
தூலந்தான் சீலைவடி கட்டிக்கொண்டு
துப்பரவாய் வெறுகடிதான் வெந்நீரில்கொள்
ஆலந்தான் அபானமது கீழேநோக்கும்
ஆடையிலும் ஓடையிலும் மூலத்துண்ணு
தாலந்தான் சஞ்சார சமாதியாகும்
தனித்தபின்பு அன்னத்தின் பொடியைக்கேளே. (39)

---

‡ ஆமம்—நோய் - ¶ நறுக்கென்றமூலம்—தேசாவரம்



கேளுமே மிளகோடு திப்பிலியுஞ்சுக்கு
கெடியான சீரகமு மதியிதுப்பும்
காளுமே கருவேம்பி னிலையினோடு
கலர்சமனாய் வகையொன்று பலந்தானென்று
நாளுமே பெருங்காயம் பலமுங்கால்தான்
தனித்துமே சூரணித்து வைத்துக்கொண்டு
ஆளுமே அன்னத்தின் நடுவேவைத்து
ஆவின்நெய் விட்டுமே பிடித்துண்ணே. (40)

உண்ணவே அபானமது கீழேநோக்கும்
உற்றுப்பார் லெச்சயங்கள் உருவித்தோற்றும்
கண்ணவே கடுக்காயு மிளகுந்தொட்டு
கைமுறையா யுண்ணயிலே முரிந்ததானால்
தண்ணவே சயமெடுக்கும் தங்கக்கற்பம்
தாக்காக வுண்டுடனே தீருந்தீரும்
துண்ணவே உதரத்தில் நோய்கள்வந்தால்
சுகமாக அப்பிரேகக் கற்பங்கொள்ளே. (41)

### கற்பம் சாப்பிடுவதால் ஏற்படும் மாறுதலுக்குப் பரிகாரம்

கொள்ளவே மலஜலமுங் கட்டிற்றானால்
குறிப்பாகக் காந்தமென்ற கற்பங்கொள்ளு
அள்ளவே உடம்பசந்து வீங்கிற்றானால்
ஆதியா மிரும்பினுட கற்பங்கொள்ளு
கள்ளவே கண்மயங்கி மறைந்ததானால்
கலங்காதே ‖கற்பூரச் சத்தைத்தின்னு
உள்ளவே கடிவிஷம்போ லுடம்பில்வீழ்ந்தால்
உறுதியாங் கற்பத்தை யுரைக்கக்கேளே. (42)

### கற்ப முறிந்தால்

உரைக்கவே வீழிவேர் சூரணித்து
உறுதியாய்ச் சூதபற்பம் வைத்துக்கொண்டால்
பரைக்கவே பதினெட்டுக் குட்டம்போகும்
பாங்கான கற்பத்தால் வந்ததோஷம்
புறைக்கவே போகவொரு கற்பங்கேளு
போக்காக அப்பிரேகச் சத்துதானும்
தரைக்கவே ஒருபலத்தில் அரைப்பலமாந்தங்கம்
தாக்கியே ஒன்றாக உருக்கிக்கொள்ளே. (43)

---

‖ கற்பூரச்சத்து—கற்பூரச்சலாசத்து

உருக்கியே தங்கமிடை செயகூதம்போட்டு
உத்தமமாங் கெந்தகத்தைச் சுத்திபண்ணி
மருக்கியே யிடைக்கெல்லாஞ் சரியதாக
மாசற்ற கெந்தகத்தை ஒட்டிவிட்டுருக்கி
நருக்கியே மருக்கெல்லாம் பொடியாய்ப்பண்ணி
நல்மான தயிலத்தில் பிசறிக்கொண்டு
பெருக்கியே பொடிபண்ணி மேருக்கேற்றி
பெரிதான வாலுகையி லெரித்திடாயே. (44)

எரித்திட்டுப் பனிரெண்டு சாமந்நீப்போட்டு
யிதமாக ஆறவிட்டு யெடுத்துப்பாரு
அரித்திட்டு அருணநிற மாயிருக்கும்
ஆயிரத்துக் கொன்றிடவே அதிகவேதை
மரித்திட்டே யென்பார்க்கு மார்பிலாணி
வகையாகப் பணவிடைதான் தேனிலுண்ண
உரித்திட்டு உகாந்தவரை யிருக்குந்தேகம்
யோகசித்தி காயசித்தி உறுதியாமே. (45)

உறுதியாய்ப் பணவிடைதான் தேனிலுண்ண
உத்தமனே முறிந்தகற்பு முற்றுந்தேறும்
குறுதியாய்க் கற்பத்தால் முறிந்ததோஷம்
கோடிவித மானாலுங் குலாவித்தீரும்
வறுதியாய் வாசனையில் நினைவுவேறாய்
வரிசைபா யேறுட்டால் கொழுகிக்கொள்ளும்
நிறுதியாய்ச் செந்தூர முண்டாயானால்
நிற்பிஷந்தான் மருவயிலே நிசமுமாமே. (46)

## பத்தியக்குறைவு விபரம்.

நிசமான கற்பங்கள் தின்னும்போது
நீக்கான சடத்துக்கு வருத்தமேது
கசமான கற்பத்தைத் தின்றுகொண்டு
காயத்தில் கோயெல்லாம் தீர்ந்தபின்பு
புசமான பெண்ணோடே புணர்ச்சிசெய்தால்
போரான சயரோகம் * சண்ணும்பாரு
பசமான கற்பமுண்போன் பத்தியத்தைவிட்டு
பயறோடு பழவகைகள் தின்றால்கேளே. (47)

* சண்ணுதல்—உண்டாதல்.



கேளப்பா நீர்கட்டு மலமுங்கட்டும்
கெடியான தோளோடு கைகால்சோரும்
தாளப்பா தம்பைச்சார் கொண்டாயானால்
துளித்துமே யிறங்கிறது துறந்துவீழும்
வேளப்பா கற்பமுண்போன் புளிதின்றாக்கால்
மிடுக்கான பெருவயறு முப்பலாகி
காளப்பா கால்கைக ளதப்புமேறி
கால்கடுப்பு கைத்திமிரு மாகுந்தானே. (48)

தானென்ற கற்பமுண்டோன் கிழங்குதின்றால்
தன்னுடம்பில் சோகையொடு பாண்டுவாகும்
மீனென்ற மாங்கிஷங்கள் மீறித்தின்றால்
மிக்கான மயக்கமொடு சுரமுமாகும்
மோனென்ற தாகத்தில் மோருகொண்டால்
மிகையான குன்மவலி மிடுக்குமாகும்
பானென்ற பச்சையுப்பு தின்றானால்
பட்டுதடா கண்ரெண்டும் பரிந்துகாணே. (49)

## சிவகரந்தைக் கற்பம்.

காணவே நாறுகின்ற கரந்தைதன்னை
கலங்காமல் சமூலந்தான் பிடுங்கிவந்து
பூணவே நிழலுலர்த்திக் கொண்டுநீதான்
உகந்துமே யிடித்தானன்றாய்ச் சூரணமேசெய்து
பாணவே பால்நெய்யில் தேனிற்கொள்ளப்
பாங்கான ‡ திங்களொன்றில் சடநாற்றம்போம்
வாணவே திங்கள்ரெண்டில் வாதம்போகும்
மருவுகின்ற மூன்றுதிங்கள் பித்தம்போமே. (50)

போகுமே நாலுதிங்கள் குஷ்டமெல்லாம்
புகழான ஐந்துதிங்கள் வன்னிமீறும்
நாருமே ஆறுதிங்கள் ஞானமீறும்
நலமான ஏழுதிங்கள் தேகம்பொன்னும்
ஏகுமே எட்டதனிற் சட்டைபோகும்
ஏத்தமாய் ஒன்பதிலே ககனங்கொள்ளும்
பாகுமே பரமசிவன் சடையில்வைத்தார்
பாங்கெல்லாங் கண்டுணர்ந்த படிதானென்றே. (51)

‡ திங்கள்—மாதம்

என்றான கரந்தையைத்தான் கொண்டுவந்து
இடித்துப்படி சாருவடி கட்டிக்கொண்டு
கன்றான கரண்டிதனைத் துப்பாவாய்விளக்கி
களிம்பகற்றிச் சூதத்தை யதிலேவிட்டு
தன்றான கரியோட்டில் வைத்தூதி
சாருதான் சுருக்கிட்டு நாலுசாமம்
பன்றாகக் கட்டியது வெண்ணெய்யாகும்
பாங்கான வெண்ணெய்யெல்லாம் வாங்கிக்கொள்ளே

வாங்கியே உண்டைபோல் வைத்துக்கொண்டு
மறுபடியு மிலையரைத்துக் கவசங்கட்டி
தாங்கியே பத்தெருவில் புடத்தைப்போட்டுத்
தப்பாமல் மறுபடியு மிலையரைத்து
தேங்கியே பத்துவிசை புடத்தைப்போட
திரண்டுமே மணிபோலக் கரியிலாடும்
ஓங்கியே உண்டைதனைக் குகையிலிட்டு
உருகையிலே நாலிலொன்று தங்கம்போடே.

தங்கத்தி னிடையொக்க நாகம்போடு
தாக்கியே கலந்தொன்றாய் உருக்கிவாங்கி
பங்கத்தின் கல்வத்தி லதனைவிட்டு
பாங்காகப் பொடித்திட்டு பொடிக்குப்பாதி
இலிங்கத்தைக் கூட்டியே தாளகமுங்கெந்தி
கோரான ‡சிலையோடு கால்வாசிகூட்டி
அங்கத்தின் கரந்தையென்ற சாருதன்னால்
அரைத்துமே பொடியாக்கி மேருக்கேற்றே.

ஏற்றியே பனிரெண்டு சாமந்தீயை
எழிலான கதிராலே கிண்டிப்பாரு
மாற்றியே மாதளம்பூப் போலேநிற்கும்
மாசற்ற நவலோகம் நூற்றுக்கொன்று
கோற்றியே கொடுத்தாக்கால் கனகமாகும்
கூர்த்துமே பணவிடைதான் கரந்தையிலேயுண்ணு
தேற்றியே மண்டலந்தா னுண்டாயானால்
சிவந்தெழுந்த சூரியன்போல் முகமாந்தேறே.

‡ சிலை—மனோசிலை.



வெண்கரந்தை.

தேறியே சங்கநிற மாங்கரந்தை
தேடியே பாக்களவு பாலிலுண்ணு
மாறியே மண்டலந்தான் உண்டாயானால்
மாசற்ற சந்திரன்போல் முகமுமாகும்
வீறியே வெள்ளைமயிர் காகமயிராகும்
மேனியுமோ பிக்கென்று சிவந்துமின்னும்
ஊறியே அமுர்தந்தான் யோகத்திற்பார்த்து
உத்தமனே அமுர்தத்தை உண்ணுஉண்ணே. (56)

உண்டுமே உமிழ்ந்தாக்கால் கல்லோடுபழுக்கும்
உகந்தசன்கள் செண்பகத்தின் கண்போலாகும்
அண்டுமே வெண்கரந்தை கொண்டுவந்து
அதிகமாம் படிச்சாறு பிழிந்துவைத்து
தொண்டுமே அயக்கரண்டி சுத்திசெய்து
சுத்தித்த சூதத்தை யதிலேவிட்டு
நண்டுமே நால்சாமம் சுருக்குப்போட
நலமாக வெண்ணெய்யெல்லாம் வழித்துவாங்கே (57)

வாங்கியே கிழிபோலே கட்டிக்கொண்டு
மாசற்ற சூடனுட தீயிலிட்டு
ஆங்கமாம் ஆரையிலைக் குள்ளேவாட்டு
அதிகமா ||மத்தங்காய்க் குள்ளேவாட்டு
மூங்கியே முன்கரந்தை கவசங்கட்டி
மூன்றுபுடம் போட்டெடுத்து உருக்கிப்பாரு
தாங்கியே தங்கம்போ லுருகியாடும்
தகர்ந்துடைந்தால் வயிரம்போல் தழுக்காம்பாரே. (58)

பாரென்ற சூதமணி யெடுத்துப்பார்த்தால்
படிகத்தின் ஒளிபோலப் பத்திப்பாயும்
காரென்று உருக்கினால் கண்விட்டாடும்
கதித்தெடுத் துடைத்தாக்கால் நொருங்குந்தூளாய்
கூரென்று குகையில்வைத்து உருகும்போது
கொடிதான நவலோகம் நீட்டினாக்கால்
தாரென்ற தவளையைப்போல் விழுங்கிப்போடும்
தனித்தபசிசைச் சரக்கூட்டில் தங்கிப்போமே. (59)

|| மத்தங்காய்—ஊமத்தங்காய்.

தங்கிப்போம் பால்மதுதேன் தன்னையுண்ணும்
சாராயந் தன்னையருந்தும் விஷம்பட்சிக்கும்
மங்கிப்போ மர்தருட ருதுபொசிக்கும்
மாசற்ற சூரியன்போல் வர்ணமாகும்
தங்கிப்போம் பூரணதெரி சனமுமாகும்
செபம்பண்ணில் யெழுகோடி மந்திரமுஞ்சித்தி
உங்கிப்போம் ‡சிவவிந்தைக் கட்டினோர்க்கு
ஒருக்காலுஞ் சாவில்லை உண்மைதானே. (60)

உண்மையாங் குளிகையைச் செந்தூரம்பண்ணு
உற்பனமாய்க் குருபண்ணு களங்குபண்ணு
வண்மையாய்ச் செந்தூரம் பணவிடைதானிறுத்து
மண்டலந்தான் வெண்காந்தை தன்னிலுண்ணு
திண்மையாஞ் சிவன்தின்று சடையில்வைத்தார்
சிறப்பாக யான்தின்ற அனுபோகத்தை
எண்மையா யிந்நூலில் எழுதிப்போட்டேன்
எனைப்போலே யாகவென்று யிசைத்திட்டேனே. (61)

## கருங்காந்தை

இசைத்திட்ட காந்தையைத்தான் கருப்பாய்ப்பண்ணி
இதமாக நிழலுலர்த்திச் சூரணமேசெய்து
நசைத்திட்ட நாழிலொன்று கெந்திருதம்
நாட்டியரை கருப்பான காந்தைதன்னால்
புசைத்திட்டுக் கருப்பாகப் பொடியாய்ப்போகும்
போட்டுமே சூரணத்தில் பிசைந்துகொண்டு
திசைத்திட்ட தேனாலே அரைத்துமைப்போல்
சிறுகவே உண்டையது சுண்டக்காயே (62)

சுண்டக்கா யளவுமண் டலந்தான்கொள்ள
சோபமில்லை தாபமில்லை மயக்கம்போச்சு
பண்டக்காய் காயத்தில் பதைப்புபோச்சு
பருத்திட்டுக் கண்ரெண்டும் பார்வையாச்சு
உண்டைக்காய் உதரத்தில் கிருமிபோச்சு
உயர்ந்திட்ட வாசனைதான் சடத்திலாச்சு
மண்டைக்காய் சிரசுதனில் வருத்தம்போச்சு
மாசற்று § வெண்டதுபோல் சடமுமாச்சே. (63)

‡ சிவவிந்து—இரசம். § வெண்டு—நெட்டி



## கொட்டாங்காந்தை.

ஆச்சுதே கொட்டையாங் காந்தைதன்னை
அதிகமாய் சமூலந்தான் பிடுங்கி வந்து
வாச்சுதே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
வடிகட்டி நாழிலொன்று கற்கண்டுசேர்த்து
வேச்சுதே ¶ வெருகடிதூள் வெந்நீரில்கொள்ள
மிடுக்காகும் கால்கைக்குப் பெலனுண்டாகும்
ஏச்சுதே வாசியென்ற குதிரைதன்னை
யேத்தியே முளைகட்டி யிருக்குந்தானே. (64)

தானான கொட்டையாங் காந்தைதன்னை
சமூலந்தான் பிடுங்கிவந்து சாருவாங்கி
ஆனாக அயக்கரண்டி தன்னில்சூதம்
அழுந்தவிட்டு மேலாகச் சுருக்குப்போடு
கானான நால்சாமஞ் சுருக்கிட்டாக்கால்
நல்லவெள்ளிக் கம்பிபோல் ரசமுமாகும்
கானான யிலையரைத்துக் கவசங்கட்டி
காரியமாய் வெருபுடமாய்ப் போட்டிடாயே.

போட்டிடுவாய் புடம்பத்து யிலைகவசங்கட்டி
போரான குகையிலிட்டு உருக்கிக்கொண்டு
நாட்டிடுவாய் தங்கமது நாலுக்கொன்று
நாகந்தான் தங்கத்தி னிடையேகூட்டி
காட்டிடுவாய் கல்வத்தில் கொருக்கிக்கொண்டு
காந்தையென்ற சாற்றாலே அரைத்து மைபோல்
பூட்டுவா யுலரவைத்துப் பொடியாய்ப்பண்ணி
பேரிதுக்குச் சரிகெந்தி கூட்டிக்கொள்ளே.

கொள்ளவே ஓட்டிலிட்டு கெந்தகத்தையுருக்கிக்
குறித்தமுன் பொடிபோட்டு வறுத்துப்போடு
கள்ளவே கல்வத்திற் போட்டுக்கொண்டு
காணிக்கி யெட்டிலொன்று தாளகமுஞ்சிலையும்
வள்ளவே காந்தையென்ற சாரரைத்து
வாகாக உலரவிட்டுப் பொடியாய்ப்பண்ணி
தெள்ளவே காசியென்ற மேருக்கேற்றிச்
சிலாகையிட்டுச் சிவந்தபதம் தீயையாத்தே (67)

¶ வெருகடிதூள்—மூன்றுவிரலாற் எடுக்கும் அளவு.

மாத்தியே மண்டலந்தான் செந்தூரத்தை
‡மதுதன்னில் குழைத்துப்பண விடைதானுண்ண
தேத்தியே சிவந்தகதிர் போலேதேகம்
சிறப்பான லோகத்தில் ஆயிரத்தொன்றிய
பாத்தியே புத்தரையே மாத்துக்காணும்
பதினாறு வயதாகும் பலிப்பாம்பாரு
யேத்தியே வாசியென்ற யோகம்பார்த்தால்
யிருந்திடுமே கற்பாந்த காலந்தானே. (68)

## சிகப்புக் கொட்டங்கரந்தை.

தானென்ற செங்கரந்தைக் கொட்டைதன்னை
தனிச்சாறு படிரெண்டு அளந்துகொண்டு
நானென்ற நாகமது பலந்தானெட்டு
நவச்சாரம் வெங்காரம் பலந்தானொன்று
ஏனென்ற பொடிபண்ணி வைத்துக்கொண்டு
யேற்றமாம் யிலுப்பைநெய் விட்டுருக்கி
வேனென்ற வெங்காரம் பொடிமேல்தூவி
விரைந்துநின்ற சார்தன்னில் சாய்த்திடாயே. (69)

சாய்த்திட்டுப் பதினொருக்கால் பின்புநீதான்
தகடுதட்டி லேசாகச் சதுரமாக்கி
காய்த்திட்ட கல்லுப்பு நாகமிடையெடுத்து
கல்லுப்பைச் செங்கரந்தைச் சாறுதன்னால்
ஆத்திட்டு அரைத்துமே தகட்டிலப்பி
அசையாம †லகலிலிட்டுப் புடத்தைப்போட்டு
மாய்த்திட்டு ஆறவிட்டு கல்வத்திட்டு
மருவியரைத் தொன்றாக வில்லைகட்டே. (70)

கட்டியே ஐம்பதொரு அடுக்கிப்போடு
கனல்குளிர்ந்த பின்புதா னெடுத்துக்கொண்டு
கொட்டியே கல்வத்திற் சாறுகனலரைத்துக்
கூர்ந்துமே பத்துவிசை யோட்டெடுத்து
திட்டியால் பார்த்தாக்கால் சிவப்புமாகும்
சிறந்திதுக்கு நாலிலொன்று சூதங்கூட்டி
வெட்டியே வெங்காரப் பொடியோடுசிலையும்
மீறுமல் சூதமிடை கூடப்போடே. (71)

‡ மது—தேன். † அகல்—மண்சட்டி.



போட்டுமே வெகுபுடமாய் ஐந்துபோடு
பேரான வெள்ளியிலே நூற்றுக்கொன்று
நீட்டுமே பத்தரையே மாற்றுக்காணும்
நிலைத்துண்ணு செங்கரந்தை தன்னில்வைத்து
மாட்டுமே மண்டலந்தான் கொண்டாயானால்
வாசியெல்லா மூள்ளடங்குஞ் சாவோயில்லை
நாட்டுமே காலாங்கி நாயன்செய்த
சூட்சமாங் கற்பத்தை திறந்திட்டேனே. (72)

## விஷ்ணு கிரந்தை.

திறந்திட்ட விஷ்ணுகிராந்தி தனைக்கொணர்ந்து
செப்பமாய் ‡மண்டலந்தான் பாலிலரைத்துண்ணு
மறந்திட்ட நினைவெல்லாம் மருவியுண்ணும்
மாசற்ற யெலும்புக்குள் சுரந்தான் போகும்
கறந்திட்ட தேகமது கருத்துமின்னும்
கண்ணொளிதான் யோசனைதூ ரந்தான்காணும்
பிறந்திட்ட சுவாசமெல்லா மிழுகியேறும்
ஏற்றமாஞ் சுழிமுனையுந் திறந்துபோமே. (73)

## வெள்ளை விஷ்ணுகரந்தை

போமென்ற வெள்ளைவிஷ்ணு கிராந்திதன்னைப்
பிடுங்கிவந்து நிழலுலர்த்தா யுணர்த்திக்கொண்டு
ஏமென்று யிடித்துச் சூரணமேசெய்து
எழிதாக மண்டலந்தான் தேனிலுண்டு
சாமென்ற சாவுபொய்யாஞ் சதுர்முகவன்படைப்பு
தப்பியே சதாகோடி தரித்திருக்கும்
காமென்ற கருவூரார் கொண்டகற்பம்
காரணமா மடியார்க்குக் கருதினாரே (74)

கருதியே வெள்ளைவிஷ்ணு கிராந்திதன்னைக்
கனமாகப் பிடுங்கிவந்து வைத்துக்கொண்டு
அருதியே அயச்சட்டி அடுப்பிலேற்றி
அதிகமாய்க் காரீயந் தன்னைவைத்து
மருதியே உருகவிட்டு வாங்கிக்கொண்டு
வருத்திடுவா யிலைபோட்டு யிரும்பினாலே
நருதியே நால்சாமம் வறுத்தாயானால்
நாட்டமாம் செம்பருத்தம் பூப்போலாமே. (75)

‡ மண்டலம்—40 நாட்கள்.

பூப்போலே செந்தூரம் பொறுமிப்போகும்
போராக ஆறவிட்டு வாங்கிக்கொண்டு
தீப்போலா மனோசிலையும் நாலந்தொன்று
செயமான வெங்காரப் பொரிதான்கூட்டு
தூப்போலச் சூதமது நாலிலொன்று
சுத்தமாங் கற்றாழைச்சாற்றிலாட்டு
மூப்போலே மூன்றுபுடம் போட்டெடுக்க
முதுமையாம் ரவிதனிலே நூற்றுக்கொன்றே. (76)

நூற்றுக்கு ஒன்றான செந்தூரத்தை
நுகர்ந்துமே மண்டலந்தான் தேனிலுண்ண
பார்த்துக்கொண்டே பெண்ணைத் திரிந்திடாதே
பாழான மனதுதனைப் பரவொட்டாதே
கார்த்துக் கொண்டேயிருநீ வாசியோடே
கலந்துமே கேசரியில் கருத்தையுண்ணு
மாற்றுக்கொண் டேறிவிடுஞ் சடமுந்தானும்
மகத்தான சித்தியிது மருவிப்பாரே. (77)

## சூரியகாந்தி விபரம்.

பார்‡பருதி காந்தியென்ற பூவைவாங்கி
பண்பாக நிழலுலர்த்திச் சூரணமேசெய்து
கோராவின் பால்தனிலே வெருகடிதான்கொள்ளு
நிசமாக மண்டலந்தான் கொண்டாயானால்
கார்கருகி யிடியிற்குள் பயமோயில்லை
கலந்துநின்ற கேசரத்தி லாடலாகும்
வார்கருகிச் சட்டைகக்கி மதன்போலாகும்
மகத்தான அமுர்தமுண்ட மார்க்கந்தானே. ( )

## அயச்செய்பு.

மார்க்கமாய் அரப்பொடிதான் புதிதாய்வாங்கி
மகத்தான பழச்சாற்றி லூறவைத்து
கார்க்கமாங் களிம்பெல்லாங் கழுவிப்போட்டு
காரியமாய்ச் சூரியகாந் தியதன்பூவை
தீர்க்கமா யிடித்துமே பிழிந்துகொண்டு
சேர்ந்தஅரப்பொடிதன்னை யூறவைப்பாய்
ஆர்க்கமா யைந்துநா ளூறப்போட்டு
அதினோடே வெங்காரங் கூட்டக்கேளே. (79)

‡ பருதிகாந்தி—சூரியகாந்தி.



## வெங்காரக்கட்டு.

கூட்டவே வெங்காரப் பலகைகேளு
குறித்த ‡உத்தாமணியின் சாறுவாங்கி
தாட்டவே பலகைதனில் தோய்த்துத்தோய்த்துச்
சமத்தான் ரவிதனிலே போட்டுவைப்பாய்
பாட்டவே பத்துநாள் போட்டபின்பு
பாங்கான லிங்கமது சுருக்குப்போட
தூட்டவே சூரியகாந்தி யிலைச்சார்தன்னில்
சுருக்கிடவே நால்சாமங் கட்டிப்போமே. (80)

கட்டியதோர் லிங்கமது பலந்தானொன்று
கல்லான காரமது பலந்தானொன்று
மட்டியதோர் பூச்சாற்றி லரைத்துமைபோல்
வளமாக மூன்றுபங்கு பண்ணிக்கொண்டு
ஒட்டியதோர் முன்வைத்த அரப்பொடிதானதில்
உறுதியாய்ப் பிசைந்துவைத்து ஒருநாள்தானும்
தெட்டியதோர் குகையிலிட்டுச் சில்லும்போட்டு
திரளவே சாவலையி லுருக்கியாட்டே. (81)

ஆட்டையிலே களிபோலே உருகும்பாரு
அடித்தரமே அயமெல்லாம் பொறுக்கிக்கொண்டு
மூட்டையிலே மூன்மருந்து பிசரிவைத்து
முதிர்ந்துமே உருக்கினால் மணியுமாகும்
பூட்டையிலே பின்பொருக்கால் மருந்திட்டாட்டு
போரான சூரியன்போல் ரவியுமாகும்
காட்டையிலே மதிதன்னில் பத்துக்கொன்று
கனகமது ஐந்தாகுங் கண்டுதீரே. (82)

தீரவே செந்தூரஞ் செய்யக்கேளு
சிறப்பான அயச்செம்பு உருகும்போது
தாரவே தங்கமது நாலுக்கொன்று
தாக்கியே உருக்கியபின் தகடுதட்டி
ஆரவே அதின்மேலே பூசக்கேளு
அரிதாரஞ் சிலைகெந்தி சூதத்தோடு
வேரனே வீரமொடு அரைக்கால்வாசி
மிகக்கூட்டி அயச்செம்புத் தகட்டிற்பூசி

‡ உத்தாமணி—வேலிப்பருத்தி.

மூரவே புடம்போட்டுப் பின்புதானும்
முன்மருந்து பூசியே புடத்தைப்போடே. (83)

புடம்போடக் கருப்பாக நொறுங்கிப்போகும்
பொரிகாரம் பொரித்தெடுத்து நாலத்தொன்று
மடம்போட்ட மனோசிலையும் நாலத்தொன்று
மாசற்ற சூதமது நாலத்தொன்று
கட்டம்போட்ட காந்திப்பூச் சாற்றரைத்து
கசகாமல் வில்லிட்டுச் சீலைசெய்து
நடம்போட லெருவாகப் புடத்தைப்போடு
நவலோகம் நாற்றிய யெம்மாமே (84)

## ஓரிலைத்தாமரை.

ஏமமாம் ஓரிலைத்தா மரைசமூலம்
இணைத்துமே சூரணித்து நெய்யிற்கொள்ள
சேம்மா யுடம்பில்நின்ற வேகமெல்லாம்
சிதைந்துமே போய்விடுஞ் சிறுநீர்தானும்
காமமாய்க் குளிர்ந்துவிடும் கண்புகைச்சல்
கிராமலை வறட்சியொடு கடிபித்தம்
வாமமாய்ப்போய்விடுமண் டலந்தான்கொள்ளு
மகத்தான ரோகமெல்லாம் மாறிப்போமே. ()

## விட்டத்தலைவேர்.

மாறவே விடத்தேரின் வேர்ப்பட்டைவாங்கி
மருவகன்று யிடித்தரித்துச் சூரணமாக்கி
தாறவே பலம்நாலு நிறுத்துக்கொண்டு
தளுக்கான சூதமது பலந்தானாலு
கூறவே சூலாமல்லிச் சாற்றினாலே
குலாவியரைத் தெண்சாமம் பொடியாய்ப்பண்ணி
தேறவே நாற்பதுநாள் தேனிற்கொள்ளு
சில்விஷமாம் பதினெட்டுக் குட்டம்போமே. (86)

## சிந்தி விபரம்.

போமென்ற ‡பொற்சிந்தி யானால்நன்று
புகழான சிகப்புநன்று கருப்புநன்று
நாமென்று கிடையாட்டால் கல்லசிந்தி
நருக்கியே துண்டுதுண்டாய்க் கிழித்துப்போடு
ஏமென்று நிழலுலர்த்தி யிடித்துத்தூளாய்
ஏத்தமாய் வடிகட்டிச் சூரணமேசெய்து
தாமென்று நாழியொன்று சக்கரையைக்கூட்டிச்
சமத்தாக வெருகடிதான் மண்டலந்தான்கொள்ளே (87)

‡ பொற்சிந்தி—மஞ்சள்சிந்தி.



கொள்ளவே குன்மமொடு சத்திவிக்கல்
கொடிதான அத்திசுரம் மெய்மறத்தல்
விள்ளவே வெகுமூத்தி ரக்கிரிச்சம்
மிக்கநீர்க் கடுப்போடு மேனிகன்னல்
தெள்ளவே சிரசிலுள்ள வாய்வெல்லந்தான்
சிறந்துமே அமுர்தத்தால் நாடிசுத்தி
கள்ளப்பா காமப்பா லுடம்பிலூறும்
கணக்கான அமுர்தசஞ் சீவிதானே. (88)

## வேப்பு.

சஞ்சீவி யாகும்நூ றாண்டின்வேம்பின்
சதைப்பட்டை வெட்டிவந்து நிழலுலர்த்தி
சஞ்சீவி யிடித்துச் சூரணமேசெய்து
சுத்தமாய் கருங்குன்றிச் சாறுவாங்கி
பஞ்சினி லைந்துவகை பாவுகமேபண்ணி
பருதிமுன்னே பரப்பியே வடிகட்டிக்கொண்டு
கஞ்சிலி கற்கண்டு நாழியொன்றுசேர்த்து
நலமாக மண்டலந்தான் கொண்டிடாயே. (89)

கொண்டிட்டால் வயிரம்போ லிறுகுந்தேகம்
குறிப்பான கண்ரெண்டுஞ் சிகப்புமாகும்
முண்டிட்டா லூழிவினைப் பயனும்போகும்
உகாந்தமாங் கற்பவரை உருகுந்தேகம்
தின்றிட்டால் நரம்பதுவு முறுக்குமாகும்
நரைதிரையு மாறுமே ஞானமுண்டாம்
ஒன்றிட்டால் யோகத்தி லுறுதியாகும்
ஒருக்காலுஞ் சாவில்லை உண்மைதானே. (90)

## கரு வேம்பு.

உண்மையாய்க் கருப்பாக வேம்புண்டாக்கி
உகந்துமே மண்டலந்தான் கொண்டாயாகில்
வெண்மையாஞ் சரீரமது கருவண்டுபோலாம்
மேனியினில் ரோமமெல்லாம் நிமிர்ந்தெழும்பும்
தண்மையாய்ச் ‡சடந்தானுங் கற்பாந்தகாலம்
சமாதியிலே யிருக்கலாந் தழுக்காய்க்காணும்
ஒண்ணுமயா யிருட்டறையி லிருந்தாயானால்
உதிக்கின்ற கதிர்போலே யிருக்கும்பாரே. (91)

‡ சடம்—தேகம்.

## சர்க்கரை வேம்பு.

பாரென்ற மலைதோறுஞ் சர்க்கரை வேம்புண்டு
பட்டைதின்றால் கற்கண்டு போலேயாகும்
காரென்ற யிலைதின்றால் கரும்புபோலாம்
காய்தின்றால் மாம்பழத்தின் ரசனையாகும்
வேரென்றால் கஸ்தூரி வாசம்வீசும்
விரைதின்றால் மிக்கநெல்லிக் கனிபோலாகும்
தாரென்ற சமூலந்தான் சூரணமேசெய்து
தனியாவின் பால்தனிலே சமர்த்தாயுண்ணே. (92)

உண்ணவே மண்டலத்தில் கெவுனசித்தி
யோகசித்தி லோகசித்தி உயர்ந்தசித்தி
விண்ணவே வேர்தன்னிற் சூதங்கட்டும்
மிக்கான இலைதன்னில் நாகங்கட்டும்
கண்ணவே காயதனில் செம்புநீறும்
கடியதொரு விரைத்தயிலம் தாதுகட்டும்
பண்ணவே பட்டைதனி லுப்புக்கட்டும்
பாங்கெல்லாம் யான்சொன்ன படியேபாரே. (93)

படியான சர்க்கரையாம் வேம்பின்காயைப்
பக்குவமா யிளம்பிஞ்சு பருவம்பார்த்து
கடிதான இடித்துமே சாறுவாங்கி
காய்ச்சியே கொளுந்தன்னைத் தோய்த்திட்டாக்கால்
எடியான அயர்தானும் யேமமாகும்
ஏத்தமாம் பூச்சாற்றில் செம்பேயாகும்.
கெடியான பழச்சாற்றில் காரியம்யேமம்
நிச்சயமாய்ப் பார்த்தபடி யான்சொன்னேனே. (94)

## பொற்றலை கையான்.

சொன்னதொரு பொற்றலையின் சாறுவாங்கிச்
செம்புதனைத் தகடுதட்டிச் சாற்றில்தோய்ப்பாய்
பன்னவே காய்ச்சியே பதினொருக்கால்
பருவமுடன் தோய்க்கவெல்லா †மதராய்வீழும்
அன்னவே அதரெல்லா மரைத்துமைபோல்
அடைவான லேசான வில்லைதட்டி
பொன்னதோ ராண்டோடு பொடித்துமூடி
பொருந்தகனி லாயிரமா மெருவிற்போடே. (95)

† அதர்—வெட்டையாய் தாளாகுதல்.



எருவிலே புடமிட்டு ஆறவிட்டு
யெடுத்தாக்கால் குருபற்ப மென்றுபேரு
அருவிலே அணுகினால் சூதங்கட்டும்
அணுகினால் மதிதனிலே யேமமாகும்
பொருவிலே பொற்றலையி னிலையரைத்துப்
போரான பாக்களவு பணவிடைதான்பற்பம்
மருவிலே மண்டலந்தா னுண்டாயாகில்
மாணிக்க வொளிபோலே வடிவுமாமே. (96)

## கிளிமூக்கு மரம்

வடிவான கிளிமூக்கு மரமதொன்று
மகாஉயர்த்தி யாயிருக்கு மகத்தான் தூலம்
இடிவான யிலையுந்தவும் அரிசிபோலிருக்கும்
ஏத்தமாம் பூப்பூத்த மற்றநாள்பழமாம்
யடிவான பழத்தையுண்டால் சாமத்தில்சித்தி
பண்பான கேசரத்தி லாடலாகும்.
கெடிதான பழமரிது கிடைக்கவென்றால்
நேர்ந்தங்கே சமாதியுற்றால் நேருந்தானே. (97)

## கரிசாலை.

சேர்ந்தபின்பு கரிசாலை குப்பைமேனி
நேர்சிறிய செருப்படியுங் கருப்பாய்ப்பண்ணி
ஏர்ந்தபின்பு யிடித்துநன்றாய்ச் சூரணமேசெய்து
ஏற்றமாந் தேனதனில் கிண்டிவைத்து
கார்ந்தபின்பு அந்திசந்தி § களஞ்சுகொள்ளு
கண்காண மண்டலந்தான் கொண்டாயானால்
தார்ந்தபின்பு தசையிலுள்ள தோஷம்போகும்
சகலநூல் கருவெல்லாந் தோணும்பாரே (98)

தோணுமே சுயம்பாட வாலைவாக்காம்
சுத்தமாய்ப் பொன்னிறம்போ லாகுந்தேகம்
காணுமே மன்மதன்போ லழகுண்டாகும்
கஞ்சமலர் போல்கண்கள் சிவப்புமாகும்
வேணுமே பெண்களனு போகந்தானும்
விரைந்தீநின்ற மாயத்தில் சிக்கவேண்டாம்
தாணுமே தரும்பாகும் பெண்ணாசைகடித்தால்
சொல்லிவிட்டேன் சித்தியெலாம் விழலாய்ப்போமே (99)

§ களஞ்சு— ஒன்றேகால் விராகனிடை - 40 குன்றியிடை

விழலாகப் போகாமல் கரிசாலைகரந்தை
மிக்கான பொற்றலையு நீலிவல்லாரை
பழலாகப் பாக்களவு பாலிற்கொள்ளு
பாங்கான மண்டலந்தா னுண்டாயானால்
கழலாகக் காயந்தான் ஆயிரத்திபெட்டு
கனகம்போல் சடலமது கனிந்துமின்னும்
மழலாக வார்த்தையது கின்னரத்தினொலியாம்
மகத்தான வர்சியது மிருக்கும்பாரே. (100)

## சிவனார்வேம்பு,

இறுகுமே சிவனார்தன் வேம்பினோடு
ஏற்றமாய் வாலுழுவை சமனாய்க்கூட்டி
நறுகுமே யிடித்துவையப் ¶ பூப்புடத்தில்தயிலம்
நலமாக வாங்கியே வைத்துக்கொண்டு
திறுகுமே சீரகமுஞ் சர்க்கரையும்போட்டு
திறமாகக் கலக்கியதில் வைத்துக்கொண்டு
தறுகுமே கால்களஞ்சி அந்திசந்தி
சனமான மண்டலந்தான் கொண்டிடாயே. (101)

கொண்டிட்டால் வாதபித்தம் கபத்தைச்சாடும்
கொடியான தாதுவெல்லாம் பருத்திருக்கும்
கண்டிட்டால் கோடைர்வி காந்தியில்லை
காலுரக்கும் யெத்தூரம் நடந்திட்டாலும்
தண்டிட்ட சமாதிக்கு ளிருந்தாற்கேளு
சாங்கமா யுரைப்புண்டாந் தளர்ச்சியில்லை
விண்டிட்ட சரசோதி நிர்த்தஞ்செய்வாள்
வேதாந்தம் பார்த்துநிந்தம் விரவிடாயே. (102)

## வெள்ளைத்தூதுவளை.

விரவுவெள்ளைத் தூதுவளை யிலையினோடு
விரிவான தக்கோலஞ் சாதிக்காயும்
வரவுவா லுழுவையென்ற விரையினோடு
மகத்தான கொடுவேலி வேரின்பட்டை
கிரவுநிலப் பனைக்கிழங்கு பொற்கொன்றைப்பூ
கோரான ஐங்கோல விரையினோடு
தரவுசமனாகவே பொடியாய்ப்பண்ணிச்
சமத்தாக வெருகடிதான் முள்பண்ணிநெய்யில்
உரவுவொரு மண்டலந்தான் கொண்டாயானால்
உகாந்தவரை சடந்தானு மிருக்கும்பாரே. (103)

¶ பூப்புடம்—மணல்மறைவு புடம்.



பாரென்ற பராபரமா மூலநாயன்
பாட்டர்பதஞ் சிரசில்வைத்து வணக்கஞ்செய்து
தேரென்ற திருமூலர் ஐநூற்றுள்ளே
சொல்லிவைத்தார் சிக்காகத் தெளிவாய்த்தானும்
ஏரென்ற ஏழாயிரத்தில்தானும்
எளிதாகச் சொல்லிவைத்தே னறியவென்று
காரென்ற காலாங்கி அய்யர்தின்ற
கற்பத்தை அடியேற்குக் கருதினாரே. (104)

கருதியதோர் சங்கத் தூதுவளைதன்னைச்
சமூலந்தான் பிடுங்கிவந்து சாருவாங்கி
பருதியதோர் படிசாறு அளந்துகொண்டு
பாங்கான பூநீறு பலந்தான்போட்டு
அருதியதோர் அயக்காண்டி தனைத்துலக்கி
ஆசில்லாச் சூதமது பலந்தான்விட்டு
சருதியதோர் சாரதனைச் சுருக்குப்போட
சமரசமாய்க் கட்டியே மணிபோலாமே. (105)

மணிபோலே நின்றதொரு சூதந்தானும்
வாட்டியே மத்தங்காய் தன்னிற்தானும்
துணிபோலே ‡ சூடனுட தீயில்வாட்டிச்
சுயமான காண்டிதனி லுருக்கிக்கொண்டு
கனிபோலே தங்கமது நாலத்தொன்று
தங்கத்தி னிடைதானும் நாகம்போடு
இனிபோலே வெங்காரஞ் சிலையுங்கூட்டி
வெளுப்பான தூதுவளைச் சாற்றாலாட்டே (106)

ஆட்டியே லெகுபுடமா யைந்துபோடு
ஆண்மையாஞ் சூதமது குருவுமாகும்
மாட்டியே வெள்ளியதில் நூற்றுக்கொண்டு
மருவிடவே மாத்தேழு காணுங்காணும்
பாட்டியே பாக்களவு யிலையதைத்து
பற்பமது பணவிடைதான் பாலிற்கொள்ள
நாட்டியே நாற்பதுநாள் கொண்டாயானால்
நலமான சூரியன்போல் முகமுமாமே. (107)

‡ சூடனுட தீயில்—சூடன் எரிகிற நெருப்பில்.

## அமுரி முரிக்க.

ஆமென்ற * அமுரிதன்னை முரிக்கக்கேளு
அடிகனத்த தேத்தாவேர் கொண்டுவந்து
பாமென்ற பாத்திரம்போல் கடைந்துவாங்கி
பக்குவமா யமுரிதனை முன்பின்தள்ளி
ஏாமென்ற பாத்திரத்தில் நடுஅமுரிவிட்டு
நற்தேத்தாம் வித்தொன்று பொடித்துப்போட்டு
காமென்ற கால்நாளி வைத்துவைக்கக்
கசடதுவுஞ் சுத்தமாய் முரிந்துபோமே. (108)

முரிந்துபோம் மூத்திரத்தின் தோஷம்போகும்
முயற்சியாங் கற்பமெல்லா மிப்படியேகொள்ளு
தெரிந்துபோம் நூராண்டின் வேப்பம்வேரில்
நுணுக்கமாய்ப் பாத்திரந்தான் பண்ணிக்கொண்டு
கரிந்துபோங் காந்தமென்ற பாத்திரமாகும்
காணிந்தப் பாத்திரம்பால் நெய்தேனுக்காம்
வெரிந்துபோங் கற்பங்கள் தின்னும்போது
வெட்டைமேல் கொண்டாக்கால் விபரங்கேளே. (109)

கேளுநீ தேத்தாவேர்ப் பாத்திரந்தான்
கிளர்ந்தெழுந்த அமுரிக்கு வைத்துக்கொண்டு
மாளுநீ வேம்பினுட பாத்திரந்தான்
மருந்தென்ற நெய்தேனுக் காகுமாகும்
காளுநீ காந்தமென்ற பாத்திரத்தில்
கற்பத்திற் குண்கின்ற வூணுக்காகும்
தாளுநீ யிந்தமுறை தப்பாமல்நின்று
சத்தியமாய்க் கற்பத்தைத் தாக்கியுண்ணே. (110)

### கற்பத்தால் ஏற்பட்ட சூடேக்குக் கிஷாயம்.

உண்ணவே கற்பத்தில் காந்தல்கொண்டால்
உயர்கின்ற மயக்கமொடு சோபதாபம்
மூண்ணவே மூர்ச்சையொடு சுரங்கள்கண்டால்
மூர்க்கமாய்க் கிஷாயமொன்று சொல்லக்கேளு
தண்ணவே தாளிசப்த் திரியுஞ்சுக்கும்
தனியான மதுரமொடு சீரகந்தான்
துண்ணவே சிறுதேக்கு கற்கண்டோடே
சிறப்பாக வகைக்கிக்கால் பலமேகூட்டே. (111)

* அமுரி—வெண்சாறை, சிறுநீர்.



கூட்டியே நீர்விட்டு யெட்டிலொன்றாய்க்
குறுகவே காய்ச்சியே பாத்திரத்திலுண்ணு
மாட்டியே மயக்கமொடு தாபசோபம்
வருத்தமாஞ் சேத்துமமுஞ் சுரங்கள்மூர்ச்சை
எட்டியே காய்ச்சலொடு எரிவுஅஸ்தி
பினிமையாம் வாய்த்துவர்ப்பு யெல்லாந்தீரும்
மாட்டியே பஞ்சகற்பந் தேய்த்துவைத்து
மருந்தென்ற நீர்தன்னில் முழுகிப்போடே. (112)

### வெந்நீர் குளிக்க.

முழுகவே பற்படாகம் நிழல் ¶ நாகல்தான்
முதிராத மருதிலையும் பழம்பாசிகூட்டு
கழுகவே செம்பரத்தை யிலையினோடு
நற்குளத்தி குளறியென்ற யிலையினோடு
உழுகவே ஊரிலைத்தா மரையின்வேரு
உத்தமே சமபாகந் தண்ணீரில்போட்டு
கழுகவே வெந்நீரில் முழுகிப்போடு
காந்தலெல்லாந் தீர்ந்துவிடுங் கற்பமுண்ணே. (113)

### நில்ஞ்சோதி.

உண்ணவே நீலமாஞ் சோதிதானும்
உயர்கின்ற கெந்தகமுஞ் சரியாய்க்கூட்டி
துண்ணவே சூதமது கெந்தகத்தினிடைதான்
துடியான திப்பிலியும் ஏலங்கூட
அண்ணவே ஐந்தையுந்தான் சமபாகமாக்கி
அதட்டியரை கல்வத்தில் அவுரிச்சாரில்
கண்ணவே நால்சாம மரைக்கமையாம்
காயவைத்துக் கால்களஞ்சு தேனிலுண்ணே. (114)

உண்ணவே வாயுவென்ற தளத்தைச்சாடும்
ஓடுகின்ற வாசியெல்லா முள்ளேதாக்கும்
தணண்வே சமாதிக்குளசைத்திடாது
சாங்கமாய்ப் ‡ பொறிகளெல்லாந் தன்மையாகும்
விண்ணவே கேசரத்தி லாடும்போது
மிக்கான மயக்கமொடு தாபமில்லை
அண்ணவே ரோமமெல்லாம் அண்டங்காக்காய்
அதினுடைய யிறகுக்கு அதிகங்காணே. (115)

¶ நாகல்—நாவல். ‡ பொறி—ஐம்பொறி.

### பிரமி.

அதிகமாம் பிரமியுட சாருபடியென்று
ஆவிநெய் படியொன்று சமனாய்ச்சேர்த்து
நிதிகமா யடுப்பில்வைத்துக் காய்ச்சிக்கொண்டு
நேர்காட்டுச் சர்க்கரைதான் நாலத்தொன்று
விதிகமா மிளகோடு திப்பிலியிந்துப்பு
மிக்கான சுக்கோடு நெல்லிதான்றி
பதிகமா மஞ்சளொடு சமனாய்ச்சேர்த்து
பாங்காக வகைக்கியொரு பலந்தான்கூட்டே. (116)

பலமாக யிடித்துநன்றாய்ச் சூரணமேசெய்து
பாங்கான மூன்நெய்யிற் கிளறிக்கொண்டு
குலமாக அடிதொடுத்துக் கற்பந்தின்று
கூர்ந்துமே மிளகுதின்னுங் காலந்தன்னில்
கலமாக க்ஷாரமெல்லாம் ராமாறுகொள்ளு
கடிசான செந்தூரம் காலையிலேதின்றால்
மலமாக நெல்லிக்காய்ப் பிரமாணந்தான்
மாலையிலே யிம்மருந்தைக் கொண்டிடாயே. (117)

கொண்டிடவே பதினாறு வயதுமாகும்
குறிப்பாய்ப்பெண் கொண்டாக்கால் கெற்பம்நாடும்
அண்டிடவே அடுக்காறு முறுவிக்காணும்
அந்தரத்தில் § மீனெல்லாம் பகலிற்காணும்
விண்டிடவே வெள்ளெழுத்து மாறிப்போகும்
மேல்கொண்ட வாசியெல்லா மீண்டுபுக்கும்
கண்டிடவே காமப்பா லுடம்பிலூறும்
கடிதான செந்தூர வேகம்போமே. (118)

### கல்பிரமி.

வேகம்போங் கல்லுக்குள் பிரமிதன்னை
விரைந்திடித்துச் சூரணமாய்ச் செய்துகொண்டு
தாகம்போம் தேனதனில் குழைத்துண்டாக்கால்
சடந்தானுங் கருங்கல்லாய்த் தளுக்குமாகும்
காகம்போங் கத்தியால் வீசினாக்கால்
கலீரென்று வெங்கலத்தி னோசைகாணும்
மாகம்போம் அந்திசந்தி மண்டலந்தான்கொள்ளு
மலையிலுள்ளோ ரெல்லாருங் கொண்டிடாரே. (119)

§ மீன்—நக்ஷத்திரம்.



கொண்டிட்ட கல்பிரமிச் சாருவாங்கிக்
குகையரைத்து யிலைதன்னைச் சூதம்விட்டு
ஒண்டிட்ட ஓட்டில்வைத்துச் சருக்குப்போட
ஒருசாமந் தனில்தானும் உண்டையாகும்
பண்டிட்ட தங்கமிட்டு நாகமிட்டு
பரிவாகக் குகையிலிட்டு உருக்கிக்கொண்டு
கண்டிட்ட கல்வத்தில் பொடியாய்ப்பண்ணிக்
கனமான சிலைகெந்தி காரங்கூட்டே. (120)

கூட்டியே கல்பிரமிச் சாரிலாட்டிக்
குறிப்பாகக் காசியென்ற மேருக்கேற்றி
ஆட்டியே பனிரெண்டு சாமந்தீயை
ஆறவிட்டு யெடுத்தாக்கால் ‡ அருணன்போலாம்
நாட்டியே நவலோகம் ஆயிரத்துக்கோடும்
நயந்துமே பணவிடைதான் பாலிலுண்ணு
மாட்டியே மண்டலந்தா னுண்டாயானால்
மாசற்ற வயிரம்போல் தேகமாமே. (121)

### நெல்லி.

வயிரமாம் நெல்லிமுள்ளி தன்னைவாங்கி
மருவநன்றா யிடித்துமே சூரணமாக்கி
அயிரமாம் அப்பிரேகச் செந்தூரந்தான்
அதற்கெட்டுப் பங்குக்கு ஒன்றுசேர்த்து
துயிரமாந் தேன்தன்னில் குழைத்துஉண்ணு
சுகமாக மண்டலந்தா னுண்டாயானால்
கயிரமாங் காயமது கருங்காலிக்கட்டை
கனல்போலே சோதியாய்க் காணுங்காணே. (122)

காணவே நெல்லிப்பூ தன்னைவாங்கிக்
கண்காண நிழலுலர்த்திச் சூரணமாக்கி
பாணவே பால்தன்னிற் குழைத்துக்கொண்டு
பாங்காக மண்டலந்தா னுண்டாயானால்
தோணவே தீயெரிப்புச் சலக்கழிச்சல்
தாய்தான யிரணங்கள் சோகைபாண்டு
ஊணவே * லோகபற்பம் வைத்தேயுண்ணு
ஓடலாம் வெகுதூர மூச்சாடாதே. (123)

‡ அருணன்—சூரியன். * லோக பற்பம்—அயபற்பம்.

## நெல்லிப்பட்டை.

ஆடாத நெல்லிவேர்ப் பட்டைவாங்கி
அதையிரவி தனிலுலர்த்திப் பானைக்கிட்டு
மேடாத மேல்மூடிச் சீலைசெய்து
மிக்கஅடித் தூர்தன்னில் துருவும்போட்டு
மூடாத பூப்புடத்தில் தயிலம்வாங்கிப்
பேரான அயப்பொடிசுத் தித்துக்கொண்டு
மாடாத தயிலத்திற் பிசறிவைத்து
மனோசிலையும் வெங்காரம் யெட்டுக்கொன்றே. (124)

எட்டுக்கு ஒன்றுதான் கல்வத்திட்டு
யிழுத்தரைத்து மூன்றுபங்கு பண்ணிக்கொண்டு
உட்டுக்கு ஒருபங்கு அரப்பொடியிற்சேர்த்து
உருக்குமீ குகையிலிட்டுச் சாஉலையிற்தானும்
நட்டுக்கு உருகிநன்றாய் மணியுமாகும்
நருக்கியே உடைத்திட்டு முன்மருந்துகூட்டி
முட்டுக்கு மூன்றுருக்கு உருக்கிப்பாரு
முதிர்ந்துஅயம் ‡ரவியாக யிருக்கும்பாரே. (125)

இருக்கின்ற அயச்செம்பில் யெட்டுக்கொன்று
வுத்தமாம் தங்கத்தை உருகையிலேயீவாய்
நருக்கின்ற நாகத்தைத் தங்கமிடைபோட்டு
நலமாக உருக்கியே தகடுவார்த்து
மருக்கின்ற மனோசிலையும் லிங்கங்காரம்
மாளவே யெட்டொன்று தயிலத்தாட்டி
தருக்கின்ற தகட்டின்மேல் பூசிப்பூசிச்
சார்வாக அகலிலிட்டுப் புடத்தைப்போடே. (126)

போடவே நொருங்கியது தூளுமாகும்
போரான மதிதன்னில் நூற்றுக்கொன்று
மாடவே மாத்துயே முறையேகாணும்
மகத்தான புடசெயத்தான் மாட்டிப்பாரு
பாடவே பணவிடைதான் தயிலத்துண்ணு
பண்பான சடந்தானுஞ் செம்புநிறமாகும்
காடவே மதிக்காப்புகையிலிட்டால்
கற்பத்தின் வேகமதால் யேமமாமே. (127)

‡ ரவியாக—செம்பாக.



## கரு நெல்லி.

ஏமமாங் கருநெல்லி மலைதோறுமுண்டு
எளிதாகக் கிடையாட்டால் கருப்புப்பண்ணி
காமமாம் காற்பதுநாள் பாலிற்கொள்ளு
நமன்வந்து நாடாமல் நடுங்கிப்போவான்
தாமமாஞ் சட்டையெல்லாங் கக்கிப்போடும்
தங்கம்போல் மேனியுமாய்த் தளுக்காய்க்காணும்
ஆடவே கருநெல்லிப் போக்குச்சொல்ல
ஆரன்காணுர் யான்தானுங் கண்டிலேனே. (128)

## கற்பூரவில்வம்.

கண்டிலேன் கற்பூர வில்வந்தானும்
கடிந்தரைத்துப் பாக்களவு பாலிலுண்ணு
அண்டில்லா அக்கினியைத் தானவிக்கும்
அழுந்துகின்ற மேகமெல்லாஞ் சாடிப்போகும்
மண்டிலேன் வாதபித் தத்தைநீக்கும்
† வாய்நீர்தான் மிகவூறல் வற்றிப்போகும்
வெண்டில்லா மேனிசர சரப்புப்போகும்
மிக்கான வெள்ளெழுத்து மீறிடாதே. (129)

## கெந்தித் தயிலம்.

மீறிடாப் பூப்பறித்து யிடித்துச்சாரு
மிகப்பிழிந்து கலசத்தில் வைத்துக்கொண்டு
நாறிடாக் கெந்தகத்தைக் கரண்டிதனிலுருக்கி
நறுநெய்யாம் பன்றியுட நெய்தான்குத்தி
தாறிடாச் சாரதனில் முப்பத்தொன்று
சாய்க்கவே கெந்தகந்தான் கட்டிப்போகும்
பாறிடாப் பன்றிநெய் விட்டரைத்துப்
பாங்காக நால்சாமம் பண்பாய்வாங்கே. (130)

வாங்கியே காசியென்ற மேருவிலேபோட்டு
வளமாகக் குப்பிக்குக் கதம்பைவைத்து
தாங்கியே சட்டிதனில் பொத்தவிட்டுக்
சாங்கமாய்க் குப்பிதனி தலைகீழாய்நிற்க
ஆங்கியே அடுப்பேற்றி அடுப்புக்குள்கிண்ணி
அகலமாய் வைத்துமே சட்டியில்தீப்போடு
தேங்கியே கிண்ணிக்குள் தைலம்வீழும்
சிறப்பான மதித்தகட்டில் தேய்த்திடாயே. (131)

† வாய்நீர்—உமிழ்நீர்.

தேய்த்துமே புடம்போட்டு ஆறிப்பார்த்தால்
சிவந்தெழுந்து பத்தரையாம் யேமந்தானும்
சாய்த்துமே தயிலத்தைப் பணவிடைதானெடுத்து
சர்க்கரையிற் கொண்டிடவே தாதுவிர்த்தி
மாய்த்துமே மனந்தன்னை மாயந்தன்னில்
மருவாமல் ¶மதியென்ற மண்டலத்திற்புக்கு
தோய்த்துமே அமுர்தந்தான் தாரையாகும்
சோமப்பால் தனையுண்ணச் சோதியாமே. (132)

சோதியாய் நூராண்டின் மரத்தைப்பார்த்துச்
சேர்தித்து வயிரமுண்டு வெட்டிவந்து
மேதியாய் மெல்லியதாய்த் தூளாய்ப்பண்ணி
மிகக்கொழுந் நிலைச்சாரில் அரைத்துமைபோல்
பாதியாய்க் குகைபோலே பண்ணிக்கொண்டு
பருவமுடன் சுத்தித்த சூதம்வார்த்து
ஆதியா யகலில்வைத்து மேலகலுமூடி
அசையாதே பத்தெருவிற் புடந்தான்போடே. (133)

போடவே சூதமது யேமமாகும்
பிரித்துயிதை விற்றக்கால் பிரமைகொள்வார்
ஆடவே கம்பிபண்ணிக் குளிகைகோர்த்து
அண்டயாள மாய்மார்பு தன்னில்போடு
மாடவே மாற்றென்ன ஐம்பத்தொன்று
மாத்திரைக்கோல் தனக்குத்தான் வளையம்போடு
காடவே குண்டலங்கள் வளையல்பண்ணு
கண்கொள்ளாச் சோதியது காணலாமே. (134)

வில்வப்பழம்.

காணலா மென்றவில்வப் பழத்தைத்தேடிக்
கனமாகப் பொருக்கியே சதையைவாங்கி
வேணலாம் வெயிலில்வைத்து உலர்த்திக்கொண்டு
மிக்கான பூப்புடத்தில் தைலம்வாங்கி
ஆணலாம் சூதத்தை அயத்தில்வைத்து
அதிதமாய்ச் சுருக்கிடவே கட்டிப்போகும்
தோணலா முன்புபோல் செந்தூரம்பண்ணிச்
சுத்தமாந் தைலத்தில் குழைத்துஉண்ணே. (135)

¶ மதிமண்டலம்—சந்திரமண்டலம், புருவமத்தி.



உண்ணவே மண்டலத்தில் நரையோமாறும்
உகாந்தமெல்லாஞ் சடந்தானு முகந்துகாணும்
பண்ணவே தயிலத்தில் நாகஞ்சாய்க்கப்
பாங்கான புகையைந்துங் கட்டிப்போகும்
அண்ணவே அயமுருகி யியமர்கும்
அறுபத்து நாலான பர்ஷாணந்தான்
தண்ணவே சாமத்தில் கட்டிப்போகும்
தனித்ததோர் உபரசங்கள் சத்துமாமே. (136)

ஐவணை.

சத்தாக ‡ஐவணைப்பூ தன்னைவாங்கிச்
சமரசமாய்ச் சாரிடித்துப் பிழிந்துகொண்டு
பத்தாகச் சாதிலிங்கஞ் சுருக்குப்போட
பாங்காகப் புகைகட்டு மணியுமாகும்
அத்தாக யிடைரெண்டு அரைபொடியைச்சேர்த்து
அதிகமாம் வெங்காரஞ் சிலையுங்கூட்டி
நத்தாக நாவிலொன்று சேர்த்துக்கொண்டு
நமனூரும் பூச்சாற்றில் அரைத்திடாயே. (137)

அரைத்திட்டு ஐந்துதர முருக்கிப்போடு
அதிகமாம் நாகம்போல் சத்துமாகும்
பரைத்திட்ட நாகத்தை நாலுக்கொன்று
பாங்காகக் கொடுத்திட்டால் உள்ளேகொள்ளும்
தரைத்திட்டுந் தங்கமிட்டுச் சூதமிட்டுத்
தனியான சிலைகாரங் கெந்திகூட்டி
நிரைத்திட்ட செந்தூரம் பண்ணிக்கொண்டு
சிறந்தநவ லோகத்தில் ஆயிரத்துக்கொன்றே. (138)

நன்றான செந்தூரம் பணவிடைதான்தேனில்
உத்தமமே மண்டலந்தான் கொண்டாயானால்
குன்றான மலைபோலக் கைகளாகும்
குத்தினால் தவுடுபொடி கூழாங்கற்கள்
வென்றான் சடமாகும் வாசிதானும்
விடுக்காமல் ¶ கும்பிக்கும் சாமந்தானும்
பன்றான பருதிக்கு ளோடும்போது
பாங்கான ரவிகாந்தி பனிபோலாமே. (139)

‡ ஐவணைப்பூ—மருதோன்றிப்பூ. ¶ கும்பித்தல்—நிறுத்தல்.

தங்கத்தி னிடைபோடு லிங்கந்தன்னைத்
தங்கயிடை சுத்தித்த கெந்தகந்தான்
அங்கத்தின் கற்றாழைச் சாரிலாட்டி
அகலிலிட்டுப் புடம்போடக் களங்கமாகும்
பங்கத்தின் ரவிமதியி லிருபதுக்கொன்றீய
பாங்கான மாத்தேழு பரிந்துகாணும்
வங்கத்தின் வேலையென்றால் புடசெயந்தான்
மறவாதே மண்டலந்தான் பானத்துண்ணே. (148)

உண்ணயிலே லகிரியது உள்ளேமீறி
உற்றுறு தலங்களெல்லா முருவாய்த்தோற்றும்
வண்ணவே வாசிசற்றும் நழுவிடாது
மறவாதே பகலிரவு வாசிமாட்டு
துண்ணவே காமமென்ற பேயைத்தள்ளு
சுகானந்தத் தனுபோகத் துன்னுநேசம்
கண்ணவே சொல்முறைகள் கருவைப்பாரு
கலந்தோடித் திரிந்தாக்கால் கசடறுச்சே. (149)

மந்தாரை.

ஆச்சென்ற வெள்ளைமந் தாரைப்பூவை
அழுத்தியே யிடித்துத்தான் சாருவாங்கி
வேச்சென்ற வெள்ளைப்பா சாணத்துக்கு
மிடுக்காக நால்சாமம் சுருக்குப்போடு
பூச்சென்ற பூவரைத்துக் கவசங்கட்டிப்
§ புளிப்பாரணிச் சாம்பலுக்குள் பொருந்தவைத்து
நாச்சென்ற நால்சாமம் கமலத்தீயால்
நாட்டியே யெரியிட்டு நலமாய்வாங்கே. (150)

நலமாக வாங்கியே ரவியிலீய
நல்மாற்று தசமாற்று ஆனவெள்ளி
பெலமான சயத்துக் கசைந்திடாது
பேணிப்பார் லெகுவான வித்தையாகும்
வலமாக மந்தாரை வெள்ளைப்பூவை
வாங்கியே நிழலுலர்த்தி யிடித்துத்தூளாய்
குலமாக வெருகடிதூள் தேனிற்கொள்ளக்
குஷ்டமது பதினெட்டு மோடிப்போமே. (151)

§ புளியம்பரணி—புளியம்பட்டைப் பொறுக்கு



வெள்ளை நீர்முள்ளி.

நாடியே வெள்ளைநீர் முள்ளிதன்னை
உற்றயிலை தானரைத்துப் பாக்களவுபாலில்
மாடியே மண்டலந்தான் கொண்டாயானால்
மாசற்ற மதிபோலே முகமுமாகும்
தேடியே காமத்தில் சிதையவேண்டாம்
சிவயோக மார்க்கத்தில் சிந்தையுன்னு
காடியே பெண்மாய்கை தன்னில்கண்ட
காரணத்தை நினைவுன்னிக் கருத்தாய்ப்பாரே. (152)

கருவான நீர்முள்ளிச் சாருவாங்கி
கரண்டிதனில் ரசம்விட்டுச் சுருக்குப்போட
நெருவான நீர்வற்றிக் கட்டிப்போகும்
நிலவரமாய்ச் சூடனை தீயில்வாட்டு
உருவான குகைதன்னி லுருக்கிக்கொண்டு
உகந்துமே நாலிலொன்று தங்கங்கூட்டு
தருவான தங்கமிடை நாகம்போட்டு
தகர்த்துமே கல்வத்தில் பொடியாய்ப்பண்ணே. (153)

பொடியான மருந்துக்குப் பாதிகெந்தி
பொடித்துமே ஓடதனி லுருக்கிக்கொண்டு
தடியான தயிலத்தில் பொடியைப்போட்டுச்
சமர்த்தாக வருத்திடுவாய் சூரியாலே
கடியான கரிபோலே தூளுமாகும்
கலரிதுக்குள் மனோசிலையுங் காரந்தானும்
பிடியான பொடிபண்ணி மேருக்கேற்றிப்
பெரிதான வாலுகையி லெரித்திடாயே. (154)

எரித்திட்ட செந்தூரம் பவளம்போலாம்
விதமான வெள்ளைநீர் முள்ளிதன்னை
அரித்திட்ட யிலையரைத்துப் பாக்களவுதானும்
பாலிலே மிகக்கரைத்துப் பருகினக்கால்
நரித்திட்ட நரையெல்லா மாறிப்போகும்
நாதாந்தப் பெருவெளியில் நாட்டங்கூடும்
உரித்திட்ட ‡ஒன்பதிலும் நாற்றுக்கோடும்
உயர்ந்திட்ட மாற்றுகு முண்மைதானே. (155)

‡ ஒன்பதிலும்—நவலோகத்திலும்.

உண்மையாய்ச் செம்பெடுத்துத் தகடுதட்டி
உற்றநீர் முள்ளியிலைச் சாறில்தோய்ப்பாய்
பண்மையாய்ப் பதினொருக்கால் தோய்த்தாயானால்
பட்டைவிட்டுச் செம்பெல்லாம் நொருங்கிப்போகும்
கண்மையாய்க் கல்வத்தி லரைத்துக்கட்டி
காசுபோல் வில்லைபண்ணிக் காயப்போடு
விண்மையாய் மூன்றுதர முலர்த்திச்சாறு
விட்டரைத்து ரவிதனிலே காயப்போடே. (156)

காய்ந்தபின்பு யிலையரைத்துக் கவசங்கட்டி
கணக்கவே புடம்போடக் கடியநீறும்
தாய்ந்தபின்பு யிடைக்கிடைதான் சூதஞ்சேர்த்து
தாக்கான வாய்நீரால் மத்தித்தேதான்
வேய்ந்தபின்பு வெய்யலில்வை கடிகைதானும்
வெண்ணீறாய்ப் பொருமியே விரிந்துபோகும்
நாய்ந்தபின்பு வீசமிடை பாலிலுண்ணு
நாற்பதுநாள் மறவாம லுண்டிடாயே. (157)

மறவாமல் ‡ மதிதன்னி லீய்ந்தாயானால்
மாசற்ற தங்கமுமாம் ஆயிரத்துக்கோடும்
பறவாமல் சூதத்தைக் கவ்விக்கொள்ளும்
பாஷாண மென்றதெல்லாம் படுநீப்பற்றும்
துறவாமல் வாழையென்ற பழத்தைவாங்கித்
திரும்பாலே தொட்டந்தப் பழங்கீறிவைக்க
அறவாமல் சாமந்தான் கழித்துப்பார்க்க
அழுந்தாது பச்சைக்கா யாகும்பாரே. (158)

பாரென்ற காய்தன்னைத் தோலைச்சீவிப்
பக்குவமாய்ச் சமைத்துண்ணு அன்னத்தோடே
காரென்ற காயந்தான் தளர்ந்ததெல்லாம்
கதித்திருகிப் பதினாறு பிராயமாவாய்
கூறென்ற குருவாலே சூதங்கட்டிக்
கொடிதான சாரணைதான் தீர்த்துக்கொண்டு
ஆறென்ற அண்டரண்ட கடாகங்கள்பார்த்து
ஆராய்ந்து அடுக்குச்சே ரிக்குங்காணே. (159)

‡ மதி—வெள்ளி.



மூலிகை உற்பத்தி விபரம்.

காணவே சிகப்புச்சித் திரமூலந்தான்
கடுஅருணன் ரதந்தன்னை வரும்போது
வேணவே வேர்வைதான் நிலத்திற்சிந்தி
மிக்ககடு மூலிகைதான் நாலுசாதி
ஆணவே சிவப்புஅயா மார்க்கத்தோடு
அனலான வெள்ளைறுக்கு ரெத்தக்கள்ளி
வணவே யிதுநாலு முற்பத்தியாச்சு
உறுதிகடு மூலிகைதா னுசத்திதானே (160)

சிவப்பு சித்திரமூலம்.

உசத்தியாஞ் சிவப்புச்சித் திரமூலந்தான்
உறுகிடித்துப் பஞ்சாக்கி வைத்துக்கொண்டு
கசத்தியாங் காரீயஞ் சட்டியிலேபோட்டுக்
கலரிதுக்குள் பதினறுக் கொன்றிணங்கள்
தசத்தியாஞ் சட்டியுலே உருக்கிக்கொண்டுக்
தாக்கிடுவாய் வெடியுப்பு மூன்னேதானும்
குசத்தியாம் ஆதண்டக் கழியினாலே
குத்தியே கடைந்திடுவாய் குறிப்பாய்த்தானே. (161

தானென்ற சிவப்புச்சித்ர மூலந்தன்னைத்
தயங்காதே போட்டுமேல் கழியால்கிண்டு
நானென்ற யிப்படித்தான் நாலுசாமம்
நலமாக ‡ ஆதண்டங் கழியால்மத்தி
தேனென்ற செந்தூரம் ரவிதான்தோற்கும்
சிறப்பாகக் கைமுறையாய்ச் செய்துபாரு
ஆனென்ற செந்தூர மாயிரத்துக்கோடும்
ஆயியுட நெற்றிதனில் பொட்டுமாச்சே. (162)

ஆச்சுதே மண்டலந்தான் வீசமிடைதூக்கி
ஆவிநெய் தேனிலுண்ண ஆண்மைமெத்த
ஏச்சுதே யிடிவிழுந்தால் சடத்தின்மேலே
எழும்பியே பந்துபோல் அப்பால்வீழும்
போச்சுதே ஆகாச கெவுனமோடில்
பளிச்சென்று மின்னலுடன் ஒளிபோற்கானும்
காச்சுதே வாதமடம் வங்கங்கம்பம்
கட்டுதற்கு மதயானை சூதங்கட்டே. (163)

‡ ஆதண்டங்கழி—காத்தொட்டிக்குச்சி.

சூதத்தை வங்கமென்ற மரத்தில்கட்டி
துப்புரவாய் பரியான விலங்கைமாட்டி
தீதத்த கெந்தகத்தைத் தீனியூட்டி
சிறப்பாகப் பலகாயம் சிலையுங்காரம்
வேதத்தை வெள்ளியென்ற குடிசில்சென்று
விடுபட்டு பத்துமாய் வெளிக்கேசென்று
காதத்தைக் கடையினிற்சென் றேறிவித்து
கனமாகச் சிவசொத்தை நீத்திட்டாரே. (164)

## இரத்த அபாமார்க்கம்.

நீத்திட்ட ரெத்தஅபா மார்க்கந்தன்னை
நிட்சயித்துப் பாக்களவு பாலிலுண்ணு
தேத்திட்ட செழுங் ‡கஞ்சம் போலாந்தேகம்
சிதையாது யிடிகொண்ட பஞ்சச்சுமையாகும்
நாத்திட்ட நாகத்தை யிலுப்பெண்ணெய்சுத்தி
நலமாதச் சாய்த்திடுவா ஐம்பத்தொன்று
வேத்திட்ட வெங்காரஞ் சாரஞ்சேர்த்து
மிஞ்சாமல் பொடிபண்ணி மேலேதூவே. (165)

தூவியே சொன்னபடி சாய்த்திட்டாக்கால்
துத்தனு கந்தானுஞ் செம்புமாகும்
ஆவியே போகாமல் செந்தூரித்துண்ணு
ஆயிரமா மாத்தாகு முன்தேகந்தான்
கூவியே திரியாதே ஒருவரோடே
குறிகெட்டா னென்றுசொல்லி குளைந்துபேச
சாவியே பித்தன்போல் சமாதிக்குள்ளே
தனித்துமே மவுனத்தைத் தாக்கிடாயே. (166)

## வெள்ளெறுக்கு.

தாக்கிட்டு வெள்ளெறுக்குப் பூவைவாங்கிச்
சமத்தாக யிடித்துமே சாருவாங்கி
பாக்கிட்ட பால்வேறே வைத்துக்கொண்டு
பாஷாணந் தனக்குத்தான சுருக்குப்போடு
வீக்கிட்ட பாலோடு சாருதானும்
மிகமாறி மாறியே விரைந்துபோடு
தூக்கிட்ட் விரையரைத்துக் கவசங்கட்டி
சுத்தமாய் வோரவைக்கப் பழுப்புச்சாரே. (167)

---

‡ கஞ்சம்—வெங்கலம்.



சாரினால் வோரைத்துக் குகைபோற்பண்ணித்
தாங்கியே கவசத்தை அதுக்குள்வைத்து
மாறினால் மேல்மூடி மண்ணுஞ்செய்து
மகத்தான கெசபுடமாய் மருவிப்போடு
தேறினால் பாஷாணங் கட்டியாக
சிறந்துநிற்கும் குகைதனிலே வெள்ளீயமுருக்கி
தாறினால் சமனுகப் பாஷாணமீய்ந்தால்
சமரசமா யுருகியொன்ருய்த் தகர்ந்துபோமே. (168)

தகர்துநின்ற யிடைக்குஅயப் பொடியைக்கூட்டிச்
சாங்கமாய்க் காரமிட்டு உருக்கியாட்டி
மகர்துநின்ற மதிதானும் அதற்குநேராய்
மாட்டியே உருக்கியபின் கல்வத்திட்டு
புகர்துநின்ற பொடியாக்கிச் சூதங்கூட்டி
புகழான காரவெள்ளைப் பாஷாணந்தானும்
உகர்துநின்ற பொடிக்குக்கால் வீரிகூட்டி
மூர்க்கமாம் பால்விட்டு அரைத்திடாயே. (169)

அரைத்துமே வில்லைதட்டிக் காயப்போடு
ஆதியாம் பூரீருக் குள்ளேவைத்து
நரைத்துமே நால்சாமங் கமலம்போல
நலமாக யெரியிடவே ‡ களங்கமாகும்
பொருந்துமே ரவிதன்னில் ஐம்பதுக்கொன்று
பொருந்தவே கொடுத்தாக்கால் மதியுமாகும்
மரைத்துமே ரசிதமல்ல சீனவெள்ளி
மாயிசொல்லச் சீஷர்களு மகிழ்கின்றாரே. (170)

## இரத்தக்களறி.

மகிழ்கின்ற ரத்தமாங் கள்ளிதன்னை
மண்தோண்டி யதின்வேரை வுலையவெட்டி
நெகிழ்கின்ற கலையம்வைத்து வெட்டுவாயில்
நிசமான துருசுகுரு பணவிடைதான்பூசி
துகில்கின்ற கலசத்தில் மண்வீழாமல்
துப்பரவாய் மேல்மூடி தூரில்தானும்
எகிழ்கின்ற வரகுவைக்கோல் கொளுத்திப்போட
ஏத்தமாம் ரசமெல்லா மிறங்கிப்போகும். (171)

---

‡ களங்கமாகும்—வெட்டையாகும்.

இறங்கியதோர் பால்தானுந் தண்ணீர்போல
    இருந்திடுமே பீங்கானி லெடுத்துவைத்து
மறங்கியதோர் மண்டலந்தா னுண்டபின்பு
    மகத்தான அமுரிதனில் லோகம்போட்டால்
பறங்கியதோர் மாற்றதுவும் பனிரெண்டாகும்
    பாங்கான அமுரிதனி லெல்லாங்கட்டும்
தறங்கியதோர் பால்தன்னில் தங்கநாகம்
    தாதுவகை உபரசங்கள் செம்புமாமே. (172)

## கருந்துளசி.

செம்பரன கருந்துளசி யிலையரைத்து
    சிறப்பான பாக்களவு தேனிலுண்ணு
கம்பான § காயந்தான் கல்லுணுகும்
    கனமான மூச்சாடும் உள்ளுக்குள்ளே
வம்பான சுக்கிலந்தான் கீழோடாது
    மதியென்ற சந்திரனில் வாசியூது
அம்பான அருவிபோல் அமுர்தந்தானும்
    அண்ணாக்கில் விழுந்ததைநீ அருந்துவாயே. (173)

அருந்தவே யிலைச்சாரில் சூதந்தன்னை
    அரைக்கவே வெண்ணெய்யாங் கிழிபோற்கட்டி
திருந்தவே படிசாரில் சுருக்குப்போடு
    சிதறாமல் சூடனுட தீயில்வாட்டு
அருந்தவே குகையில்வைத்து உருக்கவூடும்
    அதிலொக்கக் கால்வாசி தங்கமூட்டு
நருந்தவே கால்வாசி நாகமூட்டு
    நயந்தபொடி சரிக்குத்தான் கெந்திகூட்டே. (174)

கூட்டியே கருந்துளசிச் சாறுவிட்டுக்
    குலாவியே லிவங்காரஞ் சிலையுங்கூட்டு
பூட்டியே பொடிபண்ணி மேருக்கேற்றிப்
    புகழாக வாலுகையைத் தெரித்தபின்பு
ஆட்டியே ஆறவிட்டு யெடுத்துக்கொண்டு
    ஆயிரத்துக் கொன்றிடவே அதிகவேதை
நாட்டியே நவலோகத் தீய்ந்தாயானால்
    நலமாகப் பதினாறு மாற்றுமாமே, (175)

§ காயம்—சரீரம்.



## குழலாதண்டை.

மாத்தான வெண்டுழா தண்டைதன்னை
    மண்வெட்டிக் கலசத்தில் யெண்ணெய்வைத்து
யேத்தான § யேரண்ட யெண்ணெய்தானும்
    இதமாகத் தோண்டிவே ரண்டைவைக்க
கோத்தான கொதித்துமே யெண்ணெய்தானும்
    குமுளியிடும் புக்குவத்தில் கொண்டுவந்து
காத்தான காசிடைதான் கொள்ளவேதான்
    கடிதான கட்டியெல்லாம் கரைந்துபோமே. (176)

போமென்ற யிலைதானும் பொன்னிறமேயாகும்
    புகழ்கொம்பு கொறுக்கையினற் குழல்போல்காணும்
வேமென்ற வேரதுவுஞ் சிவப்புமாகும்
    மிக்கான பழமதுதான் வெளுப்புமாகும்
காமென்ற காயதுவும் பச்சையாகும்
    கண்டிந்தக் குணங்குழவா தண்டையாகும்
சாவென்ற திதைக்கண்டால் ஒருநாளுமில்லை
    சமத்தான பேரென்றால் கிட்டும்பாரே, (177)

கிட்டுமே யிலைபரித்துப் பொடியாய்ப்பண்ணி
    கிளர்ந்துதெழுந்து மண்டலந்தான் தேனிற்கொள்ளு
அட்டமா சித்தியெல்லா மாடலாகும்
    அதிகமாய்ச் சந்திரனி லோடிப்பாரு
குட்டுமே குளிர்ச்சியில்லை வெதுப்புமில்லை
    குறுகிநின்று சந்திரனே டடுத்துப்பேசி
துட்டுமே சோமனென்ற குளிகைவாங்கி
    சொர்ணமழை மாரியென்ற துன்னிடத்திலாமே (178)

ஆம்வெண்டு தலைவெட்டு சாண்தானீளம்
    அடித்துண்டில் சூதம்விட்டு அடைக்கக்கேளு
ஓமூசிக் காந்தத்தை வெண்கருவிலாட்டி
    உருட்டியா யிருபுறமு மடைத்துப்போடு
ஏமென்ற யிலைதன்னை யினுமிச்சம்பழத்தால்
    யிழுத்தரைத்து அதின்மேலே கலசங்கட்டி
நாம்சீற்ப தெருவடுக்கிப் புடத்தைபோடு
    நாகம்போற் சூதமது கட்டியாமே. (179)

§ யேரண்டத்தெண்ணெய்—ஆமணக்கெண்ணெய்.

கட்டியாஞ் சூதத்தில் சாரணையோசெய்தால்
கடுவேக மதியளவு கண்டுமீளும்
ஒட்டினல் செந்தூரம் ஆயிரத்துக்கோடும்
உருநியாய் முன்போலே செந்தூரம்பண்ணு
திட்டியாய் மண்டலந்தான் தேனிலுண்டு
சிறிதாகச் சட்டைகக்கிச் சிகப்புமாகும்
துட்டினல் ¶ தொந்தித்தால் நூறுதொந்தமேறும்
சொல்லரிது ஆதண்டைச் சூட்சந்தானே. (180)

## கருவீழி.

சொல்லான கருவீழி மலைதோருமுண்டு
சூட்சமாய் சாருபடி தைலத்துவாங்கி
மல்லான நாகத்தை உருக்கிச்சாய்க்க
மாசற்றுக் கண்விட்டு மறுகும்பாரு
வெல்லான தங்கமிட்டுச் சூதமிட்டு
மிக்கான சிலைகெந்தி வெங்காரந்தான்
நல்லான நாகத்தில் நாலிலொன்றுகூட்டி
நருக்கியே நல்வேளைச் சாறிலாட்டே. (181)

ஆட்டியே வில்லைதட்டி அகலிலிட்டு
அசகாமல் மூடியே சீலைசெய்து
கூட்டியே கெசபுடமாய்ப் போட்டெடுக்கக்
கொடிதான மாதளம்பூ நிறமுமாகும்
வீட்டியே நிசமிடை வீழித்னிலுண்ணு
மேருவெங்குஞ் சுற்றுதற்கு மேனிதிடமாகும்
பூட்டியே அடுக்காறும் புகுந்துவந்து
பொன்மலையில் பூரணத்திற் புக்கலாமே. (182)

புக்கவே கருவீழி தன்னயரைத்துப்
பொருந்தவே பாக்களவு பாலிற்கொள்ளு
தக்கவே உகாந்தவரை சடந்தான் நிற்கும்
சமாதிக்கு ளிருக்கலா மூச்சாடாது
பக்கவே பதினாறு வயதுமாகும்
பாலையா முன்தேகம் சாவுபோச்சு
நிக்கவே நிலையாறு தலங்களெல்லாம்
நிச்சயமாய் நினைவுறைக்கும் அறிவுமாமே. (183)

¶ தொந்தித்தல்—சேர்த்தல்.



## பசுவுக்கு உபதேசம்.

அறிவுண்டாய் காசிசன்மா ஆரண்யத்தில்
ஆயன்தான் மேய்க்கின்ற காலந்தன்னில்
நெறியுண்டாய்ப் புலியொன்று ஆவின்மேலே
நீச்சாகப் பாய்ந்திடவே ஆவுதப்பி
மறியுண்டாய் மலைமுழைஞ்சில் புகுந்துபோச்சு
மாட்டதனை யிடையன்தா னெங்குந்தேடி
வெறியனாய்த் தேடியே காணமல்தான்
மீண்டுவந்து மனச்சலிப்பாய் விரைந்திட்டானே. (184)

விரைந்தபின்பு ஆவுக்கு யிரையில்லாமல்
‡ விழுதியென்ற யிலைதன்னைத் தின்றுகொண்டு
அரைந்தபின்பு அநேகநாள் பொசிக்கும்போது
ஆவுக்குப் புலிபாயி லப்போதானும்
முரைந்தபின்பு மூன்றுதிங்கள் வயற்றில்கெற்பம்
மூர்க்கமா யிலைதின்று யேழுமாதம்
கரைந்தபின்பு கன்றீன்று பெரிதுமாகி
கருப்பான விழுதியிலை தின்னும்பாரே. (185)

தின்றுமே உகாந்தவரை சடமிருக்கில்
சிறப்பான மூலிகையால் சித்தியாச்சு
என்றுமே யிப்படியா யிருக்கும்போது
ஏகமாய் நானொருநா ளிலைக்குப்போனேன்
கன்றுமே கருவிழுதி தனைப்பரிக்கில்
கருதியே தாய்பிள்ளை ரெண்டுமவந்து
அண்டியே யென்னைமோந்து அடியில்நிற்க
ஆதாவா யனுபூதி யுரைத்திட்டேனே. (186)

உரைத்திடவே வாய்பேசிப் பூர்வவிருத்தாந்தம்
உரைக்கவே மனமகிழ்ந்து தாய்பிள்ளைக்குள்
புரைத்திடவே பூரணத்தின் விலாசஞ்சொல்லி
புகழான கற்பத்தின் விபரமார்க்கம்
பிரைத்திடவே சமாதியொடு ஞானங்கூறி
பிரமநிஷ்டை யோகத்தைப் போதித்தேனன்
நிரைத்திடவே யோகத்தில் நின்றுதேறி
நிலையான காயசித்தி யோகசித்தியாச்சே. (187)

‡ விழுதியிலை— வீழியிலை

யோகசித்தி ஆயிரண்டும் பண்ணிக்கொண்டு
உற்றபசி யடக்குதற்கு வீழியாகும்
தாகசுத்தி சுனைத்தண்ணீர் தனைக்குடித்து
தாய்முலைப்பால் தன்னையே கன்றுக்கீய்ந்து
ஆகசித்தி அநேகமாங் கோடிகாலம்
அடுக்கான மலைமுழைஞ்சில் புக்கினின்று
காகசித்தி போல்பறந்து காமதேனுவைக்
கற்பாந்தந் தாய்பிள்ளை யிருந்திட்டாரே. (188)

இருந்திட்ட படியாலே கருத்தவீழி
ஏத்தமா மலைதனிலே யிருக்குமெத்த
கருந்திட்ட கருவீழி கொண்டுதானும்
கடியதொரு அண்டமெல்லாஞ் சோதித்தேன்பார்
பருந்திட்ட கருவீழி பாட்டர்கொண்டார்
பயின்றெடுத்த காலாங்கி பருகித்தின்றார்
உருந்திட்ட கருவீழி உயர்த்திமெத்த
உயர்த்தியா மூலியெல்லா முரைக்கக்கேளே. (189)

மூலிகை விபரம்.

கேளென்ற கருநெல்லி கருத்தநொச்சி
கெடியான கருவீழி கருத்தவாழை
காளென்ற § கரியகரு சாலையோடு
கருப்பான நீலியொடு கரியவேலி
கோளென்ற கருமத்தை தீபச்சோதி
கொடுதிரணச் சோதியொடு சாயாவிருட்சம்
ஏளென்ற யெருமைகனைச்சாக ரோமவிருட்சம்
ஏற்றமாஞ் சுணங்கவிருட்சஞ் செந்திராயே. (190)

செந்திராய் செங்கள்ளி செம்பல்லியோடு
சிவந்தகற் றாழைசெஞ் சித்ரமூலம்
நந்திராய் சிவப்புஅபா மார்க்கத்தோடு
நலமான கல்பிரமி கல்சேம்பாகும்
பந்திராய் கல்லுத்தா மரையினோடு
பாய்ந்தகுழ லாதண்டை மகாபொற்சிந்தி
வெந்திராய் வெண்புரசு வெள்ளைத்துத்தி
மிகுவெள்ளைத் தூதுவளை மிடுக்குமாமே. (191)

§ கரியகருசாலை—கருங்காப்பூரன்.



மிடுக்கான † குண்டலமாம் பாலையோடு
வெள்ளைநீர் முள்ளிவெள்ளை விஷ்ணுகிராந்தி
கடுக்கான வெண்கண்டங் காரியோடு
கசப்பான பசலையொடு மதுரவேம்பு
இடுக்கான கிளிமூக்குத் துவரைஅழுகண்ணி
கெடியான பொன்மத்தை மதுரக்கோவை
படுக்கான பொன்வண்ணச் சாலியோடு
பாங்கான கருந்தும்பை மதனத்தண்டே. (192)

தண்டோடு மூலியையாங் குருந்தினோடு
தணலான சிவந்தநில்லை கருத்தவேம்பு
இண்டோடு இவ்வகைகள் கற்பத்தைந்து
ஏத்தமா மலைகளிலே மெத்தவுண்டு
பண்டோடு பாஷாண மறுபத்தினாலும்
பட்டுடனே கட்டுண்டு படுதீப்பற்றும்
துண்டோடு சூதமது கட்டுமாகும்
சுயம்பான உபரசங்கள் சத்துமாமே. (193)

சத்தான மூலிகையில் சுருக்குச்சுற்றி
சாப்பிட்டால் மண்டலந்தான் சாவோயில்லை
மத்தான மன்மதன்போல் தேகமாகும்
மாசற்று நரைதிரைக ளெல்லாமாறும்
எத்தான வாசியெல்லா மிருகிப்போகும்
ஏறலாங் கெவுனத்தில் ஏற்றமாக
அத்தான அடுக்கெல்லாஞ் சென்றேயேறி
அண்டரண்ட பதமெல்லா மறியலாமே. (194)

அண்டக் கற்பம்.

அறியவே அண்டத்தின் கற்பங்கேளு
ஆக்கமாங் கருங்கோழி சாவலுடன்பேடு
வறியவே வளர்த்தந்த முட்டைவாங்கி
மாசற்ற கல்லுப்பைப் பொடியாய்ப்பண்ணி
பறியவே பாண்டத்தில் பாதிபோட்டு
பதித்துமே முட்டையைத்தான் மேலும்போட்டு
செறியவே ஆகாசக் கெருடனென
கிழங்குச்சார் படிவிட்டு மூடிப்போடே. (195)

† குண்டலமாம்பாலை—வெப்பாலை

TAMIL NADU ARCHIVES LIBRARY, EGMORE, MADRAS
No. 101430
LC N45

மூடியே யிருபதுநாள் கழித்தபின்பு
முசியாம லெடுத்துப்பார் கட்டிப்போகும்
ஓடியே யவ்வொன்று கிழங்குச்சாற்றில்
ஊறவிட்டு நீர்வற்றக் காய்ச்சிக்கொண்டு
தேடியே மேலோடு தள்ளிப்போட்டு
சிறப்பாக ரெண்டாக்கிப் பாதிகொள்ளு
ஆடியே அக்நிசந்தி மண்டலந்தான்
அன்றாட மன்றாட மளித்துக்கொள்ளே. (196)

கொள்ளவே மண்டலந்தா னக்நிசந்தி
குத்திறால் காயத்தில் தைத்திடாது
கள்ளவே கருங்கல்லாஞ் சடலந்தானும்
கற்பாந்த காலந்தான் மசகமாச்சு
துள்ளவே நித்திரைதான் கொள்ளொட்டாது
சோபமில்லை சாபமில்லை துறப்பசியும்போச்சு
விள்ளவே சுக்கிலந்தான் கீழோடாது
வேண்டியதோர் பெண்ணோடே மருவலாமே. (197)

## மூலிகை கருப்பேற்றுதல்.

மருவவே கருப்பாக மூலிதன்னை
வைக்கிறதோர் முறைதானும் வண்மைகேளு
கருவவே காம்பைமண்தான் அரையளவுவிட்டு
கதித்துநன்றாய்ப் பரப்பியே பாத்திகட்டி
திருவவே சேங்கொட்டை முழுவுயரம்போட்டு
சிறப்பாக வெட்டிவிட்டால் மூன்றுதிங்கள்
தருவவே முழுக்கொட்டை ஆறுதிங்கள்
ததும்பாமல் விட்டுவரத் தண்ணீர்தானே. (198)

தானான சேங்கொட்டை அழுகியபின்பு
தண்ணீரை விடாமல்தான் காயப்போடு
பானான பத்துநாள் காயவிட்டுப்
பாங்காகக் கொத்தியே ஆறப்போட்டு
வானான பாத்தியெல்லாம் வரிசையாக்கி
வைக்குகின்ற மூலிகைதான் கரியசாலை
தேனான காக்கையொடு செருப்படைஒமம்
செப்பரிய வல்லாரை ‖ நீலிதானே. (199)

‖ நீலி—அவுரி.



தானான கருவிழி கருத்தவாழை
தாக்கான கருநெல்லி கருத்தநொச்சி
கானான கருவேம்பு கருத்தவேலி
கருத்தமணித் தக்காளி கருஊமத்தை
பானான அறுக்கீரை கருங்கடுக்காய்
பாங்கான கஞ்சாவும் மற்றுமூலி
வேனான வேர்விரைகள் கொடிகள்கொம்பு
விதித்துவைத்துக் காய்ந்தபின்பு விரையைவாங்கே (200)

வாங்கியே முன்போல்சேங் கொட்டைபோட்டு
வாகாக அழுகிமண்ணில் சேர்ந்தபின்பு
மாங்கியே மண்காய்ந்த பிறகுநீயும்
வருக்கின்ற போதுதான் இரட்டித்தேபோடு
வேங்கியே விரைதெளித்துப் பயிருண்டாக்கி
விரைமுதிர்ந்த போதுதான் மறுபடித்திற்போடு
தாங்கியே நாலுதரம் போட்டுத்தீர்ந்தால்
சமரசமாய் முழுக்கருப்பு ஆகும்பாரே. (201)

பாரென்ற பார்பரம விருட்சத்துக்கெல்லாம்
பாங்காகக் குழிவெட்டி ஆள்உயரம்போடு
மூரென்ற முதல்தரமா மூலிகையைக்கொள்ளு
முதிர்ந்தபின்பு இரண்டான மூலிகையைக்கொள்ளு
தாரென்ற மூன்றான மூலிகையைக்கொள்ளு
தன்மையாய் முழுக்கருப்புப் பின்னேகொள்ளு
காரென்ற நரைதிரைகள் மாறிப்போகும்
நலமாகும் பரிட்சையறப் பார்த்துக்கொள்ளே. (202)

பார்த்துமே கொக்கிறகு தன்னில்தானும்
பரிவான யிலைச்சாறு மூன்றுதரந்தடவி
வேர்த்துமே வெய்யிலினில் போட்டுவைக்க
மிக்கான ‡ காகத்தி னிறமேயாகும்
நேர்த்துமே யிப்படித்தான் நிலைமைபார்த்து
நிச்சயித்துக் கருப்பான மூலிகையைக்கொள்ளு
சேர்த்துமே சித்தர்கள்தான் கொண்டமார்க்கம்
திறமையாய் திட்டந்தான் செப்பினேனே. (203)

‡ காகத்தினிறமென்பது—கருப்பு வர்ணமாமென்பு.

செப்பினேன் பாட்டர்திரு மூலனையன்
சிறப்பான கரிசாலைக் கற்பமுண்டு
ஒப்பிலெழு பதுகோடி யுகமிருந்தார்
உகந்துயென யின்றகா லாங்கினையன்
கப்பினேன் காக்கையென்ற கற்பமுண்டு
கண்திறவாச் சமாதியிலே கற்பாந்தம்நின்றார்
அப்பினேன் அடியேன்தான் ஓமமுண்டு
ஐந்துயுகம் பிள்ளைகட்கு அருள்செய்தேனே. (204)

செய்ததொரு செருப்படையின் கற்பமுண்டு
சிறுபாட்டர் பதஞ்சலியார் வியாக்கிரமர்தானும்
அய்ததொரு அம்பலத்தில் அனந்தங்கோடி
அதிகமாய்த் தவமிருந்து ஆடல்கண்டார்
மய்ததொரு மச்சமுனி வல்லாரையுண்டு
மௌனமாஞ் சமாதியிலே கோடியுகம்நின்றார்
வொய்ததோர் கூர்மமுனி கருவீழியுண்டு
கோடியுகஞ் சமாதியிலே கூர்ந்திட்டாரே. (205)

கூர்ந்திட்ட சித்தர்கள்தான் கோடாகோடி
குறிப்பாகக் கற்பமுண்டு கொடிதாய்ஞானம்
ஆர்ந்திட்டு அதீதத்தில் லயித்துப்போனார்
அதிகமாய் லிங்கத்தில் புக்கினோர்கோடி
ஓர்ந்திட்ட தாதியிலே ஒன்பதுபேர்சித்தர்
ஒருகோடி நவகோடி கோடாகோடி
பூர்ந்திட்டுப் பூரணத்தில் லயித்தோர்கோடி
பேரான நாதாக்கள் சித்தினாட்டே. (206)

கரியுப்புக் கட்டு.

ஆட்டான அன்னத்தில் உப்புக்கூட்ட
அடைவெல்லாஞ் சொல்லுகிறே னறிந்துகொள்ளு
பூட்டான கல்லுப்பைப் பாக்குப்போல்பொறுக்கி
பெருங்குப்பை மேனியொடு கல்லுருவியோடு
நீட்டான சாரிடித்துப் பிழிந்துகொண்டு
நீக்காக யெட்டிலொன்று பழச்சாருகூட்டி
காட்டான கல்லுப்பில் பிசறித்தானும்
காயவே போட்டிடுவாய் § ரவியில்தானே. (207)



ரவியிலே அடிக்கடிக்குப் பிசறிப்போட
நலமாக ஏழுநாட் கழித்தபின்பு
புவியிலே வெங்காரம் மனோசிலையும்லிங்கம்
பொருந்தவே உப்புக்கு யெட்டிலொன்று
தவியிலே சாரரைத்து நாலுசாமம்
தண்ணீர்போல் குளப்பியே வைத்துக்கொண்டு
கெவியிலே பாயும்போ துள்ளேசெல்லக்
கெடியான கல்லுப்பில் பிசறிப்போட்டே. (208)

போட்டுமே காய்ந்தபின்பு ரெண்டிலையுமரைத்துப்
பேராகக் கவசமாய்க் கட்டித்தானும்
நீட்டுமே நூறெருவிற் புடத்தைப்போடு
நனுக்கமா யாறவிட்டு யெடுத்துக்கொண்டு
மூட்டுமே சாருவிட்டு முன்புபோல
மூன்றுநாள் பிசறியே ரவியிற்போடு
நாட்டுமே வெங்காரம் ம்னோசிலையும்லிங்கம்
நலக்கரைத்து முன்னிலையைக் கவசங்கட்டே. (209)

கட்டியே கனபுடமாய்ப் போட்டுத்தீர்ந்தால்
கரியில்வைத்து உருக்கிப்பார் கண்விட்டாடும்
நட்டியே யிந்தஉப்பைப் பொடியாய்ப்பண்ணி
நவமாகக் கறிசோற்றி லுண்டுவாநீ
கெட்டியே உன்னுடம்பு இரும்புத்தூணும்
கிளர்ந்தெழுந்து அமுரியிலே யிறங்காதுப்பு
மட்டியே பச்சையுப்புத் தின்றாயானால்
வாய்த்திருந்த சித்தியெல்லா மண்ணாய்ப்போமே. (210)

நாகக்கட்டு.

மண்ணான நாகத்தைக் கட்டக்கேளு
வழக்கமாம் வெடியுப்புப் பலந்தானைந்து
தண்ணான வெண்ணெய்சவுக் காரமைந்து
சமாசமாய்ப் பொடிபண்ணிச் சட்டியிட்டு
அண்ணான அடுப்பேற்றி யெரித்தாயானால்
அழன்றுமே வெந்துருகிச் சுண்ணமாகும்
உண்ணான சுண்ணத்துக் கிடைதான்பாதி
உகந்தண்டம் பொடியாக்கி உணர்வுகேளே. (211)

## வங்கச் சுண்ணம்.

உணர்வான காரியம் வங்கம்ரெண்டும்
உறவாகச் சட்டிதனி லுருக்கிக்கொண்டு
இணர்வாக § இருவங்கத் திடைக்குத்தானும்
யியல்பாகப் பொடியிட்டு வறுத்துக்கிண்டு
அணர்வான பொடிபோட்டு அடிக்கடிக்கு
அயத்தினால் கிண்டிடவே சுண்ணமாகும்
நணர்வான நாகத்தைச் சுத்திபண்ணி
நலமாக வில்லைபோல் வார்த்துக்கொள்ளே. (212)

வார்த்துநின்ற வில்லைக்குச் சமனாய்த்தானும்
வங்கத்தின் சுண்ணம்பைக் கவசங்கட்டி
சேர்த்துநின்ற உலைதன்னில் சிவக்கஊதி
சிறக்கவே ஆறவிட்டுக் கவசம்வாங்கி
வார்த்துநின்ற மறுசுண்ணங் கவசங்கட்டி
வண்மையா யிப்படியே ஐந்துதரம்ஊதி
கார்த்துநின்ற கலசத்தை வாங்கிப்போடு
காரசா ரம்போட்டு உருக்கிடாயே. (213)

உருக்கியே லேசாக வில்லைதட்டி
உருதியா யிதுப்பைப்புண் ணுக்குத்தன்னை
கருக்கியே ‡ பழச்சாரா லரைத்துமைப்போல்
நயமாக அடைதட்டி ரெண்டுதானும்
அருக்கியே நாகத்தை அதில்பரப்பி
அடைமூடி யெருவடுக்கிக் கெசபுடந்தான்
கருக்கியே போட்டெடுக் கநாகங்கட்டிக்
கரியில்நின் று கண்விட்டு ஆடுந்தானே. (214)

## வெங்காரக் கட்டு.

தானான வெங்காரப் பலகைதானும்
தனித்தெருதின் சாணியிலே கழுவிப்போடு
ஊனான மணியென்ற சாரில்தோய்த்து
உருவெய்யில் தனில்போடு வாரந்தானும்
ஆனான அடிக்கடிக்குத் தோய்த்துத்தோய்த்து
அதிகமாம் ரவிதன்னில் தினமும்போடு
வேனான தினந்தோறும் ரவியில்தானும்
மிரளாதே தோய்த்துமே போட்டிடாயே. (215)

‡ இருவங்கம்—கருவங்கம், வெள்வங்கம்.



போட்டிட்டு யெட்டுநா ளானபின்பு
பொருந்தவே மணியென்ற யிலையரைத்து
காட்டிட்டுக் காரமேல் கவசங்கட்டிக்
காடையாம் புடமொன்று போட்டெடுக்க
மாட்டிட்டுக் காரமது மணியுமாகும்
மனோசிலைதான் பலமொன்று நிறுத்துக்கொண்டு
நீட்டிட்டுப் புளிப்பான காடிதன்னில்
நிட்சயமாய்க் கிளிஞ்சியென்ற சுண்ணம்போடே. (216)

## மனோசிலை சுத்தி.

சுண்ணந்தான் காடியிலே கரைத்துக்கொண்டு
டோளைகட்டி யெரித்திடுவாய் சாமந்தானும்
கண்ணந்தான் கத்தாழஞ் சோறுவாங்கிக்
கடுக்காய்த்தா லிட்டுமே தெளிவிறுத்து
வண்ணந்தான் மனோசிலைக்குச் சுருக்குப்போடு
வங்கமாஞ் சுண்ணம்புக் கவசங்கட்டி
திண்ணமாய்க் கரியோட்டில் சிவக்கவாட்டிச்
சிறப்பாக வைத்துமே ‡ அரபொடியைவாங்கே. (217)

வாங்கியே பழச்சாரி லூறவைத்து
மாசகற்றிக் கழுவியே வைத்துக்கொண்டு
தேங்கியே துருசியொரு கட்டிவாங்கித்
திறமாக முன்சொன்ன வங்கச்சுண்ணம்
ஆங்கியே அதுமேலே கவசங்கட்டி
அண்டத்தின் கடுஞ்சுண்ண மதின்மேல்கட்டி
ஓங்கியே அண்டத்தின் கடுஞ்சுண்ணங்கேளு
ஓடெடுத்துச் சுண்ணம்புத் தண்ணீரில்போடே. (218)

போட்டுமே யெரியிட்டுக் கழுவிப்போடு
புகழ்ந்தபின்பு பழச்சாரி லரைத்துமைபோல்
மூட்டியே கெசபுடமாய்ப் போட்டெடுத்து
முயன்றுமே அகலோடே மூன்றுபுடம்போடு
மாட்டுமே மறுபடியு மரைக்கவேண்டாம்
மாசற்ற சுண்ணம்பு உபாசத்தின்சுண்ணம்
தாட்டியே தாம்பூலந் திண்ணலாகும்
சமரசமாங் கற்பத்துக் குறதிதானே. (219)

‡ அரபொடி—இரும்புத்தூள்.

உறுதியாய்ச் சுண்ணம்பைக் கவசங்கட்டி
உவர்மண்ணில் வைத்துமே யெரிதான்சாமம்
இறுதியாந் துருசியது சுண்ணமாகும்
சிவப்பான செம்பரத்தைப் பூவில்போட்டு
சுறுதியாய்ப் பிசைந்துவைக்கச் § சாமந்தானும்
சுத்தெல்லாங் கக்கியே சிவப்பாய்வீழும்
நிறுதியாய் லிங்கத்தில் சுருக்கிட்டேதான்
நிலவரமா யெடுத்துவைத்து நேர்மைகேளே. (220)

அயனாகம்.

நேர்மையாய் முன்வைத்த அரைபொடியைநிறுத்து
நிசமாகப் பலம்நாலு நிறுத்துக்கொண்டு
சீர்மையாய் முன்கட்டு கல்லுப்பொன்று
சிறமையாய் முன்கட்டு வெங்காரமொன்று
வார்மையாய் மனோசிலையாங் கட்டொன்று
மகத்தான துருசியென்ற சுண்ணமொன்று
தார்மையாஞ் சாதிலிங்கக் கட்டொன்று
தாக்கியெல்லாம் வாழைப்பால் தன்னாலாட்டே. (221)

ஆட்டியே ஐந்துபங்காய்ப் பிரித்துக்கொண்டு
அரைபொடியில் ஒருபங்கு பேர்றிவைத்து
வாட்டியே மறுநாள்தான் குகையிலிட்டு
வாய்மூடி உலையிலிட்டுத் துருத்திரெண்டால்
ஊட்டியே உருக்கிடுவா யுயர்ந்தவனத்தாய்
உடைத்துமே மறுபங்கு மருந்துகூட்டி
நீட்டியே ஐந்துதர முருக்கித்தீர்ந்தால்
நேரான அயந்தானும் நாகமாமே. (222)

செம்பு சுத்தி.

ஆமென்ற செம்புதனைத் தகடுதட்டி
அதீதமாம் பழச்சாரி லூறவைத்து
நாமென்ற நாலுநாள் கழுவிப்போட்டு
கல்லகட்டு சாதிலிங்கம் மனோசிலைவெங்காரம்
காமென்ற கட்டுப்புப் பழச்சாரிலரைத்துக்
கலந்தப்பிக் காயவைத்துத் தகட்டில்தானும்
ஆமென்ற ஆதண்டம்வேர்ப் பட்டைவாங்கி
அதீதமாம் வெண்ணொச்சிச் சாருவாங்கே. (223)

§ சாமம்—ஏழரை நாழிகை.



வாங்கியே பட்டைதனைச் சாருதன்னால்
வார்த்தரைத்து மைபோலே தேங்காய்மட்டும்
ஆங்கியே அடைதட்டிச் செம்பைத்தானும்
அதில்பரப்பி மேலுமந்த அடையால்மூடி
தேங்கியே மண்செய்து புளிப்பாணியெருவுஞ்
சேர்ந்தடுக்கிக் கெசபுடமாய்ப் போட்டுவாங்கு
தூங்கியே செம்பதுவும் சொருங்கித்தூளாம்
சுத்தமா யெடுத்துவைத்துச் சொல்லக்கேளே. (224)

சொல்லவே முன்கட்டு உப்பைத்தானும்
சிவகரந்தைச் சாரரைத்து † மூசைபண்ணி
பல்லவே உப்புக்குப் பாதிசூதம்
பகுந்தரைத்துச் சிவகரந்தைச் சாரினாலே
நல்லவே நால்சாம மரைத்தபின்பு
நலமாக மூசையிலே வாரியிட்டு
மெல்லவே உப்பாலே மேலேமூடி
மீட்சியில்லா தகலில்வைத்து வெயிலில்போடே. (225)

வெய்யலிலே போட்டபின்பு அகலால்மூடி
வெடியாமல் மண்செய்து புடமேபோடு
நய்யலிலே மெழுகாகும் பின்புகேளு
நலமான ஆறையில் கவசங்கட்டி
அய்யாலே புடமைந்து போட்டபின்பு
கனமான சூடாறத் தீயில்வாட்டி
உய்யலிலே முன்கட்டு உப்புத்தானும்
ஒருபலந்தான் குகையிலிட்டு உருக்கிடாயே. (226)

உருக்கையிலே உப்புக்குக் கால்வாசிதங்கம்
உருகட்டு நாகமுங்கால் வாசிபோடு
கருகையிலே நாகயிடை செம்புகாரம்
கல்காரத் திடைபோடு சூதந்தன்னை
பருகையிலே லிங்கமுமப் படியேபோடு
பரியோடே அயஞ்சேர்த்துக் கூடப்போடு
கருகையிலே மனோசிலையைப் போட்டுவாங்கு
கண்காண மயில்கழுத்துக் களங்கமாச்சே. (227)

† மூசை—குகை.

களங்கத்தை †ரவிமதியி லீய்ந்தாயானால்
கண்டிடுமே தசமாந்து கருதிப்பாரு
புளங்கத்தைக் கல்வத்தில் பொடியாய்ப்பண்ணிப்
பொற்றலையின் சாரிலாட்டிப் போடக்கேளு
விளங்கத்த வெங்கார மனோசிலையும்லிங்கம்
மீறாமல் களங்குக்குங் கால்வாசிகூட்டி
இளங்கத்த யேகத்தில் சரியாய்க்கெந்தி
யிருத்தரைத்து பொற்றலையின் சாராலாட்டே. (228)

ஆட்டியே ஓட்டிலிட்டு வறுத்துக்கொண்டு
அரைவாசி காசியென்ற மேருக்கேற்றி
வாட்டியே வாலுகையின் மேலேவைத்து
மறவாதே பனிரெண்டு சாமந்தீயை
நீட்டியே ஆறவிட்டு யெடுத்துக்கொண்டு
நிட்சயமாய் ஆயிரத்துக் கொன்றுபோடு
மாட்டியே பனிரெண்டு மாத்துக்காணும்
மருவிநின்ற காயசித்தி யிதற்குள்ளாச்சே. (229)

ஆச்சென்ற உப்பில்லா லோகவேதை
ஆகாது புடத்துக்கு உறுதியில்லை
மாச்சென்ற உப்பாலே வந்தவேதை
மசக்கில்லை மாசில்லை வழக்குமில்லை
காச்சென்ற காயசித்தி கடுநிலாகும்
கனமான உப்பென்ற செந்தூரந்தான்
பாச்சென்ற பணவிடைதான் தேனிலுண்ண
பத்தியந்தா னிதன்பின்பு யில்லைதானே. (230)

தானென்ற பத்தியத்தை விட்டுநீயும்
சமரசமாய்க் கற்பமெல்லா முண்டுபாரு
வானென்ற வாசியைநீ அந்திசந்தி
மறவாதே லெட்சாரத்தை மாட்டித்தீரு
பானென்ற ஞானவெள்ளந் தன்னையுண்டு
பாசமான மனிதருட பழக்கம்விட்டு
நானென்ற ஆணவத்தை களியக்கொட்டி
நாதாந்தப் பெருவழியி லாட்டம்பாரே. (231)

† ரவிமதி—வெள்ளி, செம்பு.



## களங்குச் செந்தூரம்.

நாட்டமாய் உப்பென்ற செந்தூரத்தை
நாற்பதுநாள் அந்திசந்தி கொண்டபின்பு
ஆட்டமா மரைபொடிதான் பலமும்பத்து
அதைநிம்பப் பழச்சாரி லூறவைத்து
மூட்டமாய் மூன்றுநாள் தண்ணீரில்கழுவி
முயற்சியாய் வாமப்பால் விட்டுவைத்து
மாட்டமாய் மனோசிலையுங் காரம்லிங்கம்
மருவியே யெட்டிலொன்று பொடித்துப்போடே. (232)

பொடித்துமே மூன்றுநாள் போட்டபின்பு
பேரான குகையிலிட்டு உருக்கிக்கொண்டு
மடித்துமே மறுபடியும் கொருக்கித்துளாய்
மாசற்ற வாமப்பால் தன்னில்போட்டு
துடித்துமே முன்போலே மருந்துகூட்டிச்
சுத்தமாய் மூன்றுருக்குத் தீர்ந்தபின்பு
வெடித்துமே வேறாக வைத்துக்கொண்டு
மீறியதோர் சாரத்தைக் கட்டக்கேளே. (233)

## சாரக் கட்டு.

கட்டவே சாரமொரு பலந்தானாலு
கழுதையுட மூத்திரமோ படியும்ரெண்டு
புட்டவே பொடுதலையின் சாருபடிரெண்டு
பூநீரு படியரைதான் கூடப்போட்டு
எட்டவே யேகமாய்க் கலக்கிக்கொண்டு
யிருத்துமே தண்ணீரு ஒன்றில்வைத்து
தட்டவே சாரமொரு பலந்தான்கூட்டித்
தளஓட்டின் மேல்வைத்துச் சுருக்குப்போடே. (234)

சுருக்கிடுவ தெப்படித்தா னென்றால்கேளு
துணிகட்டிக் கழிதன்னில் தோய்த்துக்கொண்டு
குருக்கிடுவ கொஞ்சமாய்த் தடவிக்காய்ச்சி
குத்தியே சீலையினால் புரட்டிக்காய்ச்சு
சுருக்கிடுவ நால்சாமஞ் சுருக்குப்போடு
நயந்தபிஷ்டி தனையெடுத்துக் கவசங்கட்டி
இடுக்கிடுவ சீலைசெய்து மண்மறைவுபடர்தான்
செயமாகக் கட்டுமது சாரந்தானே. (235)

கட்டுகின்ற சாரத்தில் சமனாய்த்தானும்
கடி ¶ கண்டர் சுண்ணத்தைக் கவசங்கட்டி
புட்டுகின்ற பூரீருக் குள்ளேவைத்துப்
பூர்த்தியா யூதிடவே புஷ்பமாகும்
வெட்டுகின்ற வெங்காரப் பலங்களைந்து
மீறுமுத்தா மணிச்சாரு தன்னில்தோய்த்து
தட்டுகின்ற ரவிதன்னில் தோய்த்துப்போடு
சுருக்காக யெட்டுநாள் கட்டுமாமே. (236)

ஆமென்ற வெங்காரம் பலந்தான்ரெண்டு
அண்டோடு சுண்ணமது பலந்தான்ரெண்டு
காமென்று கட்டினதோர் சாரம்காலு
கடிந்தரைத்து செட்டடங்க மட்டுமாட்டு
பாமென்று வழித்தெடுத்துக் கலசத்திட்டுப்
பக்குவமாய்ப் புடம்போட்டுப் பனியில்வைக்க
தேமென்ற செயநீர்தான் சுருக்குரெம்புச்
செப்பமாய்ப் பரணிதனில் சேர்த்திடாயே. (237)

சேத்திட்ட செயநீரில் வீரம்பூரம்
சிறப்பான சவுக்காரச் சுண்ணந்தானும்
பூத்திட்ட பொடித்திட்டு லிங்கத்துக்குப்
பேராகச் சுருக்கிடவே கட்டிப்போகும்
மாத்திட்ட கெவுரிமனோ சிலையுங்கூட்டு
மணிபோலே நின்றாடும் வீரந்தானும்
ஆத்திட்ட செயநீரி லறுபத்துநாளும்
அரகரா முழுக்கட்டு ஆகும்பாரே. (238)

ஆகுமே அயம்நின்று உருகும்போது
அத்திடைக்கு காவிலொன்று தங்கம்போடு
தாகுமே தங்கமிடை நாகம்போட்டுத்
தாக்கிடுவாய் அயத்தினிடை லிங்கந்தானும்
ஏகுமே உட்கொண்டு சரக்கெல்லாந்தான்
ஏத்தமாங் களங்காகும் கல்வத்திட்டு
போகுமே பொற்றலையின் சாறாலாட்டிப்
புடம்போட்டுத் தேனிலே பொருந்தவுண்ணே. (239)

¶ கண்டர்—துருசு.



உண்ணவே மண்டலந்தான் அக்கிசந்தி
உகாந்தவரை தேகத்துக் கழிவோயில்லை
கண்ணவே மேனியது கருங்கல்லாகும்
கத்தியால் வீசினால் தோலுமுரியாது
பண்ணவே சிங்கம்போல் பராக்கிரமமாகும்
‡பருதியா மண்டலத்திற் புக்கலாகும்
விண்ணவே மேனியுட ரோமமெல்லாம்
விடுபட்ட வேனத்தின் ரோமம்மாமே. (240)

காந்த சத்து.

ரோமமாங் கேசரந்தான் பலமோபத்து
நுட்பமா மயிலிறகு பலமோபத்து
ஏமமாம் எள்ளுப்போல் நறுக்கிக்கொண்டு
யேத்தமா முலைப்பாலில் விதனைக்கொட்டி
கேமமாங் கெந்தகந்தான் பலமோஐந்து
கெட்டியா மனோசிலைதான் பலமும்மூன்று
வேமமாம் வெங்காரம் பலமுமூன்று
†வீரமது பலமொன்று தருசுபலம்காலே. (241)

காலோடு கட்டியதோர் கல்லுப்பொன்று
நலமான சவுக்காரச் சுண்ணமொன்று
ஏலோடு யிதுவெல்லா மெருக்கம்பாலில்
யிழுத்தரைத்து மயிருதனில் பிசறிக்கொண்டு
வேலோடு வில்லைபண்ணி வெயிலில்வைத்து
மிக்கான பூப்புடத்தில் தயிலம்வாங்கு
பாலோடு ||பரணிதனி லடைத்துக்கொண்டு
பலம்பத்து காந்தத்தைப் பண்பாய்வாங்கே. (242)

பண்பான ஊசியெட்டிப் பிடிக்குங்காந்தம்
பருபருக்கை யாயுடைத்துக் கிழிபோல்கட்டி
வெண்பான வெள்ளாட்டு உதிரந்தன்னில்
மிக்காக மூன்றுநா ளூறவைத்து
பண்பான காடிதனில் கொதிக்கவிட்டு
கழுவியெல்லாங் கல்வத்தில் மருந்தையிட்டு
தண்பான காவிலொன்று காரம்போட்டுத்
தாக்கியரை தயிலம்கால் சாமந்தானே. (243)

‡ பருதி—சூரியன்: || பரணி—குப்பி.

சாமந்தா னரைத்தபின்பு குகையிலிட்டு
தாக்கியே துருத்தியது ரெண்டாயிட்டு
வாமந்தா னூதிடவே கட்டுமாகும்
மறுபடியுந் தயிலம்விட்டுக் காரம்போட்டு
பூமந்தான் குகைக்குள்ளே வாரியிட்டுப்
பொருந்தவே யூதினால் மணியுமாகும்
ஆமந்தா னிப்படியே ஐந்துதரமூது
ஆச்சுதே காயசித்தி யாண்மைதானே. (244)

ஆண்மையாஞ் சத்திலே காரமிட்டு
அடிகனத்த கிண்ணியாய் மெழுகட்டிவாரு
கேண்மையாய் அமுரிகொள்ளு செந்தூரங்கொள்ளு
கெட்டியா முன்தேகம் சித்தியுண்டாம்
தாண்மையாய்ச் சட்டைகக்கி சந்திரபிம்பம்போல்
சதாகோடி வேதாந்தம் பார்க்கலாகும்
காண்மையாய்க் ‡கரியுரித்தோன் நடனமெல்லாம்
கண்டுகொண்டு காட்சியா யிருக்கலாமே. (245)

இருக்கவே காந்தமென்ற சத்துதன்னை
யிதமாகக் குகையில்நின்று உருகும்போது
திருக்கவே நாலுக்கு ஒன்றுதங்கம்
தங்கத்தி லிடைபோடு நாகந்தன்னை
நருக்கவே சத்திடைதான் சூதம்போடு
நணுகியதோர் சூதமிடை கெந்திபோடு
பொருக்கவே பொற்றலையின் சாராலாட்டிப்
பொடிபண்ணிக் காசியென்ற மேருக்கேற்றே. (246)

மேருக்கே யேற்றியே தீயைமூட்டு
விதமாகப் பனிரெண்டு சாமந்தானும்
ஆருக்கே ஆறவிட்டு யெடுத்துக்கொண்டு
அருணநிற மாயிரத்துக் கொன்றுயீவாய்
போருக்கே நவலோகம் பொன்னுமாகும்
புக்கின்ற மாத்ததுவும் பனிரெண்டாகும்
மாருக்கே மண்டலந்தான் தேனிலுண்ண
வச்சிரம்போற் தேகமுமா மருவியுண்ணே. (247)

‡ கரியுரித்தோன்—ஈஸ்பரன்.



உண்ணவே சமாதிக்குள் ளிருந்துகொண்டு
ஊழியாங் காலமெல்லா முண்ணலாகும்
கெண்ணவே கேசாத்தி லாடும்போது
கெடியான யிடிமின்னல் கிட்டஅஞ்சும்
வண்ணவே மாருதத்தில் சுழலொட்டாது
மதியளவு மோடையிலே குளிர்ச்சியில்லை
அண்ணவே நூற்றறுபதா மண்டத்தில்
அய்யரென்ற நந்தியடி யறியலாமே. (248)

## அப்பிரேகச் சத்து.

அறியவே அப்பிரேகச் சத்துத்தானும்
அதிற்கேளு முதல்தரந்தான் ‡யேமவர்ணம்
தெறியவே சிவப்புவர்ணம் ரெண்டாம்பட்சம்
செப்பக்கேள் கருப்பானால் மூன்றும்பட்சம்
மறியவே வெளுப்பானால் நாலாம்பட்சம்
மகத்தான நாலுவகைச் சாதிதன்னில்
எறியவே யேமவர்ண அப்பிரேகந்தன்னை
யிடித்துநன்றாய் நவநீதம் பண்ணிக்கொள்ளே. (249)

பண்ணியே கிளிபோலே கட்டிக்கொண்டு
பாங்கான கொள்ளோடே வேகவைத்து
திண்ணியே தினமொன்று வெந்தபின்பு
சேரிதிலே வெங்காரம் பாதிதானும்
கண்ணியே கல்வத்திற் போட்டுக்கொண்டு
கருப்பான வெள்ளாட்டு ரெத்தந்தாட்டு
மண்ணியே மாளமட்டு மரைத்தபின்பு
மகத்தான வெண்ணெய்குன்றி வெல்லந்தானே. (250)

தானான தேனோடு சிறுமீனெள்ளு
தாக்கான கோதும்பை உளுந்துமொச்சை
வேனான முசலெலும்பு யெருமைக்கொம்பு
வேகமாங் குதிரையுட குளம்புதந்தம்
வானான வாத்தவளை குக்கிலோடு
வகைக்கொன்று பலங்கால்தான் வளமாய்ப்போட்டு
கோனான அப்பிரேகம் பலந்தான்பத்து
கூட்டியெல்லாம் வெள்ளாட்டு ரத்தத்தாட்டே. (251)

‡ யேமம்—தங்கம்

ஆட்டியே வில்லைபண்ணிக் காயவைத்து
அடுக்கடுக்காய் வங்கமென்ற காளத்தூது
மூட்டியே முத்துப்போல் சத்துவீழும்
முறைமுறையா யுடைத்தெடுத்துக் கறட்டைவாங்கி
மாட்டியே முன்போல மருந்துகூட்டி
மறவாதே வங்கமென்ற காளத்தூது
நீட்டியே மருந்திட்டு ஐந்துதாமூது
நினைவாகச் சத்தெல்லாம் பொறுக்கிக்கொள்ளே. (252)

பொறுக்கியே சரக்கெல்லா முருக்கிக்கொண்டு
போரான காரமொடு சாரஞ்சேர்த்து
தறுக்கியே சாய்க்குகிற விபரங்கேளு
தனியான அதிமதுரம் யிலுப்பைப்பூவும்
தெறுக்கியே தேனோடு நெய்யும்வெல்லம்
சீரான நல்லெண்ணெய் தேங்காய்ப்பாலும்
அறுக்கியே ஆட்டுப்பால் சதுரக்கள்ளி
அடிப்பாலுஞ் சமனாகக் கலக்கிக்கொள்ளே. (253)

கலக்கியே கலசத்தில் வார்த்துவைத்து
கைமுறையாய்ச் சத்துருக்கி அதிலேசாய்ப்பாய்
பலக்கியே பதினைந்து தரமேசாய்த்துப்
பார்த்தாக்கால் சருகைவெள்ளி போலாஞ்சத்து
தலக்கியே சத்துருக்குச் சமனாய்த்தங்கம்
தாக்கியே பாத்திரம்போல் வார்த்துக்கொண்டு
அலக்கியே அப்பிரேகச் சத்துக்கிண்ணி
அட்செயமாம் பாத்திரமென் றறிந்துகொள்ளே. (254)

அறிந்திட்ட பாத்திரத்தில் வஸ்துவைத்து
அருச்சித்து ஆத்தாளை அஞ்சலபண்ணி
பறிந்திட்ட வாசியெல்லா மிழுத்துவாங்கிப்
பரங்கான அறிவோடே பானம்பண்ணி
நெறிந்திட்ட ‡துவாதசத்தில் நினைவையுன்னி
நேர்மையெலா மறிந்திடுவாய் நிலைத்துப்போகும்
தெறிந்திட்ட அப்பிரேகக் கிண்ணிதன்னில்
சிறப்பாக அடித்தூரில் சீலைசெய்யே. (255)

‡ துவாதசம்—பனிரெண்டு



சீலைசெய்து வாலுகையின் மேலேவைத்துச்
சிறந்திட்ட பாத்திரத்தில் சூதம்விட்டு
காலைசெய்து கருமத்தஞ் சாருவிட்டுக்
கலந்தெரிப்பாய் நாலசாமங் கமலத்தீயால்
வேலைசெய்த வெண்ணெய்போல் குலைந்துபோகும்
மிக்காக வழித்தெடுத்துத் தண்ணீரில்போடு
ஆலைசெய்து ஆரையிலை கவசங்கட்டி
அடுக்ககப் பதினைந்து புடந்தான்போடே. (256)

புடம்போடு பிரமியிலை கவசங்கட்டிப்
புகழாகப் பதினைந்து புடமும்போடு
திடம்போடு செந்திராய் கவசங்கட்டித்
திறமாகப் பதினைந்து புடமுமானால்
அடம்போடு குளிகையுமா மகற்குள்கேளு
அபினோடு கஞ்சாவுஞ் சாதிக்காயும்
முடம்போடு பத்திரியுங் கிராம்புநாபி
முத்தியதோர் மதன்வித்து தேங்காய்தானே (257)

தேங்காயுங் கசகசா சாரிபருப்புஞ்
சிறப்பான மருள்மத்து யெட்டிவித்து
தாங்காயு மிதையெல்லா மிடித்துமையச்
சாராயம் விட்டரைத்துச் சாமந்தானும்
வாங்காயுங் குளிகைக்குக் கவசங்கட்டி
மார்க்கமாம் புகைபோக்கில் கட்டிவைத்து
காங்காயு மண்டலந்தான் கழிந்தபின்பு
ரவியிலே போட்டிடுவாய் தினந்தான்பத்தே. (258)

தினம்பத்துக் கழித்தபின்பு வாயிலிட்டால்
ஸ்திரீகளுக்குத் தம்பனமாஞ் சுருக்குமெத்த
இனம்நூற்றி யெட்டுமணி தாவடமாய்க்கோர்த்து
யியல்பான ஐந்தெழுத்து ஆறெழுத்துமோத
மனம்பார்த்துத் தேவியொடு சிவன்தான்வந்து
மிகத்தான யோகசித்தி காயசித்திமீவார்
தனம்பார்த்து வாதமுதல் சித்தியாகும்
சாங்கமாய் மனமுரைத்தால் சித்தியாமே. (259)

சித்தியாம் ரசவர்தி ஞானயோகி
செகசாலந் தனைமறந்து செம்மையாக
முத்தியா மனமுரைத்த லவனேஞானி
யூரிருந்தென் காடிருந்தென் மலையில்வாழ்ந்தென்
அத்தியாந் தான்வேறு பொருள்வேறென்று
அசத்தில்லா வெவ்வுருவும் ஒன்றேயென்று
§ தத்தியாய் மனமுறைத்துச் சாங்கமாகிச்
சடமெடுத்த வித்தேது விந்துவாச்சே. (260)

விந்துவாஞ் சூஸ்திரத்தில் மந்திரமோசித்தி
மேகத்தி லோடுகிற குளிகைசித்தி
உந்துவாம் யோகசித்தி ஞானசித்தி
உறுதியாங் காயசித்தி யோகசித்தி
சந்துவாஞ் சடத்துக்குள் ஆதாரஞ்சித்தி
சாஸ்திரத்திற் சொல்லாத கருவோசித்தி
அந்துவாம் அஷ்டாங்கம் சித்தியாகும்
ஆச்சரியஞ் சூதத்தைக் கட்டினோர்க்கே. (261)

கட்டியதோர் சூதத்தில் சாரணைதானூட்ட
கண்ணிமைக்கு ளாயிரந்தான் காதம்போகும்
தெட்டியதோர் குளிகையில்லாக் காயசித்தி
சீக்கிரமாய்ப் பட்சத்தில் தெரிந்துபோகும்
குட்டியதோர் குளிகைதன்னை வாயில்வைத்துக்
குறிப்பாகக் கல்மண்ணில் ஓடுதன்னில்
சூட்டியதோர் துப்பியே உருக்கிப்போடச்
சயம்பாகும் பதினெட்டு மாற்றுத்தானே. (262)

மாத்தான அப்பிரேகக் கிண்ணிதன்னை
வரிசையாய் நொருக்கியே குகையில்வைத்து
ஊத்தான துருத்திவைத்து உருக்கிக்கொண்டு
ஊட்டிடுநீ தங்கத்தை நாலுக்கொன்று
காத்தான நாகத்தைத் தங்கத்தைத்தானும்
சலமாகத் தொந்தித்து ரெட்டியூட்டு
சாத்தான லிங்கமொடு காரந்தானும்
கால்வாசி யூட்டிடவே களங்கமாமே. (263)

§ தத்தியாய்—உண்மையாக.



களங்கத்தை ரவிமதியி லீய்ந்தாயானால்
கண்டிடுமே திசமாற்று கருதிப்பாரு
புளங்கத்தைப் பொற்றலையின் சாராலாட்டிப்
பேணியே புடம்போடு அரைத்தரைத்து
மூளங்கத்தை மூன்றுவிசை போட்டெடுத்தால்
முதுமையாங் கோவையென்ற பழம்போலாகும்
அளங்கத்தை ஆயிரத்துக் கொன்றுயீய்ந்தால்
ஐயிரண்டு மாற்றுகு மறிந்துகொள்ளே. (264)

அறிந்துகொள்ளு செந்தூரங் குன்றிதானும்
அக்கிசந்தி மண்டலந்தான் தேனிலுண்டால்
முறிந்துநின்ற கற்பமெல்லா மீறியூறும்
மிடுக்கான வாசியது சொன்னபடிநிற்கும்
செறிந்துகொண்ட செவுனத்தில் திரிந்துகொண்டு
கெடியான துருவமட்டும் புகுதலாகும்
பறிந்துநின்ற வயிரமது பளிச்சென்றுப்போல்
பாங்கான உன்னுடம்பு மின்னுமாமே. (265)

## பூநாகச்சத்து.

மின்னலாம் §பூநாகச் சத்துக்கேளு
விளங்கியதோர் செம்மண்ணுங் குளத்துக்குள்ளே
குன்னலாங் குளிவெட்டி நீளத்தானும்
குதிரைலத்தி பரப்பியே கொஞ்சமாக
வன்னலாம் வரகுவைக்கோல் மேலேபோட்டு
வாகாக வெல்லத்தைக் கரைத்துத்தூவி
முன்னலா மூடிவைக்கப் பூநாகந்தான்
மூனையாக மேய்ச்சலுக்கு நிறையும்பாரே. (266)

பாரென்ற தினம்பார்த்துப் பொறுக்கிக்கொண்டு
பாறையிலே தினந்தோறும் உலரப்போடு
நேரென்ற நூறுபலம் நிறுத்துக்கொண்டு
நுணுக்கமாங் காரமது பலந்தான்பத்து
சேரென்ற காரத்தைத் தேன்வார்த்தாட்டி
திறமாகப் பிசறியந்தப் பூநாகத்தில்
வாரென்ற பாண்டத்தில் வைத்துமூடி
மண்செய்து மார்க்கமாய் அடுப்பிலேற்றே. (267)

§ பூநாகம்—நாக்குப்பூச்சி.

அடுப்பேற்றித் தீயெரிப்பாய் சாமம்நாலு
அடையாகப் பூநாகம் பற்பமாகும்
கடுப்பேற்றி யிதையெடுத்துக் கல்வத்திட்டுக்
கதிப்பான தேனோடு வெல்லங்குன்றி
வெடுப்பேற்றி வெண்ணெய்யொடு காரங்கூட்டி
மிடுக்காக அரைத்துநன்றாய்த் தினந்தானென்று
விடுப்பேற்றி வில்லைகட்டி வங்கம்நாளம்
மிக்கவே ஒவ்வொன்றாய்ப் போட்டுணதே. (268)

போட்டுதே மணிமணியா யிறங்குஞ்சத்து
பொறுக்கியே குறடுமிந்தப் படியேனது
வாட்டுதே வந்ததெல்லா மெடுத்துக்கொண்டு
வாகாகக் காரமிட்டு உருக்கிநன்றாய்
ஆட்டுதே அப்பிரேகஞ் சாய்த்தாப்போலே
ஆண்மையாய்ப் பதிணைத்து தரமுஞ்சாய்த்து
சாட்டுதச் சத்தினுட மகிமைசொல்லச்
சதாசிவனு முன்பின்னாய்த் தயங்கினாரே. (269)

தயங்காத பூநாகச் சத்துதானும்
தாக்கியே குகையில்நின்று உருகும்போது
வயங்காத வயிரமொன்று கொடுத்தாயானால்
மாசற்று உருகியே உள்ளேகொள்ளும்
துயங்காத சூதமொன்று கொடுத்துவாங்கி
சுகமாக மேற்பூச மருந்துகேளு
வியங்காத வீரமொடு புனுகுசீலம்
மேன்மையாம் பூரமொடு வழலைதானே. (270)

வழலைதனை வாய்நீர் லரைத்துக்கொண்டு
மணிமேலே பூசியே உலரப்போடு
நிழலைதன்னைக் குகையிலிட்டுச் சில்லுப்போட்டுச்
சீலைசெய்து §கெசபுடமாய்ச் சிறக்கப்போடு
பழலைதனைப் பரனின்ற வயிரந்தானும்
பண்பாகக் குருவாச்சு பாருபாரு
அழலைதனை அடக்கிவிட்ட வாசிபோல
ஆச்சரிய மிதின்வேதை அதீதந்தானே. (271)

§ கெசபுடம்—இரண்டுமுழப்புடம்.



அதீதமாங் குருவொன்று சூதமொன்று
அரைத்திடுவாய் முலைப்பாலால் கடிகைநாலு
குதீதமாய்க் குகையில்வைத்துப் புடத்தைப்போடு
கூகைநீர் போலவது குருவுமாகும்
சுதீதமாஞ் சூதமது குருவுமாச்சு
சுத்தித்த சூதமது பத்துக்கொன்று
மூதீதமா முலைப்பாலா லரைத்துக்கட்டி
முன்போலே குகைவைத்துப் புடத்தைப்போடே. (272)

புடம்போடு யிப்படித்தா நூறுதொந்தமேற்றிப்
போக்கான திதன்குணத்தைப் புகலக்கேளு
தடம்போடு தங்கத்தில் பத்துக்கொன்று
தாக்கிடவே தங்கமது செம்பேயாகும்
அடம்போடு தங்கரவி அதிகக்காந்தி
அறுபத்து நாலுதொந்தம் சேர்ந்தபின்பு
விடம்போடு வெள்ளியிலே நூற்றுக்கொன்று
மிடுக்கான தொந்தரவி யீய்ந்திடாரோ. (273)

சுய்ந்திடவே பத்தரையே மாற்றுக்காணும்
இச்செம்பு செந்தூரம் வீசமிடையுண்ணு
பாய்ந்திடவே பட்சத்தில் சித்தியாகும்
பரையான பூரணத்தில் மருவப்பண்ணும்
ஆய்ந்திடவே ஆறுதல் மடுக்குயெல்லாம்
அணுகிடிலோ அங்கமெல்லா மடுக்காய்க்காணும்
தோய்ந்திடவே துவாதசாந் தத்தில்நின்று
சூட்சமெல்லாங் கண்டவர்க்குச் சளுவிலாமே. (274)

ரசக்குளிகை.

சளிவாக அப்பிரேகச் சத்தில்தானும்
சுத்தித்த சூதமது யீரெட்டுக்களஞ்சி
நளிவாக §வாலுகையில் கிண்ணிவைத்து
நலமாகச் சுத்தித்த சூதம்விட்டு
களிதாகக் கருமத்தன் சாருவிட்டுக்
கமலம்போ லெரித்திடவே யிறுகிப்போகும்
மெளிதாக வெண்ணெய்யைத்தான் வாங்கிக்கொண்டு
மிக்கான ஆரையிலைக் கவசங்கட்டே. (275)

§ வாலுகை—அடுப்பு.

ஆரையிலே பதினைந்து புடந்தான்போடு
அரசிலையில் பதினைந்து புடந்தான்போடு
பூரையென்ற பிராயிலையில் பதினைந்தாகும்
பெரிதான மத்தங்காய் பதினைந்தில்வாட்டி.
தீரையிலே சூடனுட தீயில்வாட்டித்
தீவனந்தான் காண்பதற்குப் பூரகச்சத்து
ஓரையிலே ஒன்பதுக்கு ஒன்றுவட்டி
உருகவே விடுவிக்கச் சாரணைதானுமே. (276)

சாரணைதான் சூட்டியிதில் செய்தபின்பு
தயங்காத கெந்தகத்தின் சத்தைவட்டு
காரணைதான் உபரசத்தில் கிடைத்தசத்து
கலங்காமல் விடுவித்துப் பாசணச்சத்து
நாரணையாம் நவலோகச் சத்தையூட்டு
நவரத்தினச் சத்திட்டுச் சாரணையைத்திரு
தாரணையாங் காரசாரத்தையூட்டு
சாய்த்துமே சாரணையில் வைத்துக்கொள்ளே. (277)

ரசக்கிணறு.

வைத்துமே யிப்படித்தான் குளிகைரெண்டு
வாயிலொன்று கரத்திலொன்று வைத்துக்கொண்டு
கெய்த்துமே கெவுனத்தி லோடுநீதான்
கெடியான கிழக்கெழுந்து கேசரத்தில்
எய்த்துமே ஈசான மூலைக்குள்ளே
ஏற்றமாய் ரோமபுரிப் பட்டணத்தில்
தெய்த்துமே தெற்காக விரதகூபக்
தேடியே ஆதிரசக் கிணற்றைப்பாரே. (278)

கிணத்தடியிற் ராட்சதனைக் காவல்வைத்து
கிருபையதாய்த் தேவர்களும் கார்த்தரித்தம்
மணத்தடியிற் சூதத்தை முனிதர்சித்தர்
மகத்தான கெவுனிகள்தா னெடுப்பாரென்று
சணத்தடியிற் சதாசித்தல் காவலாகும்
தாக்கான *பஞ்சகிருத்தியம் தாட்சியாக
நிணத்தடியிற் போகாமல் சிவன்தான்முன்னே
நிறுத்தினார் காவலாய்க் கிணற்றில்தானே. (279)

* பஞ்சகிருத்தியம்—சிருட்டி திதி, சங்காரம், திரோபயம், அனுக்கிரகம்.



தானான ரிஷிசித்தர் யோகிதானும்
தவசுபண்ணி அநேகநாள் தங்கியேதான்
கோனான குளிகைக்கு ரசமெடுத்து
கெவுனத்திற் பாய்ந்துகிணற் றடியிற்போனேன்
ஆனான சூதமது கொடுஞ்சருக்காய்த்
தடார்க்கெழுந்து பாய்ந்திடவே சுருக்காயோடி
நானான ரவிதனிலே சொக்கிக்கொண்டு
நாதாந்தத் தாய்பதத்தில் நாடினேனே. (280)

டியே தாய்தன்னைக் கேட்கும்போது
நாட்டமொன்று சொல்லிடவே நம்பியானும்
டியே பாயலைத்தான் தோத்தரித்துப்
பாங்கான தப்பனமா மந்திரத்தைத்
தடியே செபம்பண்ணச் சூதந்தானும்
சுரத்தாம லடங்கிற்று சீக்கிரமாய்த்தானும்
டியே தேங்காயின் குடுக்கைக்குள்ளே
அடைத்துமே கட்கத்தி லமைத்திட்டேனே. (281)

அமைத்திட்டு கெவுனத்தி லெழும்பும்போது
அளிம்பான கெவுனியவன் மறித்துக்கொண்டு
சிமைத்திட்டுச் சிவனுடைய பொக்கிஷத்தைத்
திருடியே போவானே னென்றுசொல்லி
பமைத்திட்ட § குளிகையைத்தான் பரிக்கவந்தான்
பரிவான திருமூலர் போன்யான்தான்
குமைத்திட்ட குளிகைகட்டக் கொண்டுபோறேன்.
கொடுமூலர் சாபத்தால் கல்லாவாயே. (282)

கல்லான நகேசம்பேர் காவலுண்டு
கைலையுரை சிவனுடைய பொக்கிஷத்தை
எல்லாரு மெடுப்பார்க ளென்றுயெண்ணி
யெங்களைத்தான் காவல்வைத்தா ரேற்றமாக
இல்லாறுற் சிவனுடைய உத்தாரப்படிக்குச்
செய்கிறதே யல்லாமல் மற்றொன்றில்லை
வல்லானும் கொடுபோநீ யென்றுசொல்லி
மறிக்கவே அனைவருந்தான் வந்திட்டாரே. (283)

§ குளிகை—இரசமணி.

வந்திட்டுச் சுற்றிலுமே வளைத்துக்கொண்டார்
வசியமா மந்திரத்தை உச்சரித்தேன்
அந்திட்டு அடிவணங்கி யெல்லோருந்தான்
அய்யாநீர் யாருடைய மரபுயென்றார்
முந்திட்டு மூலருட மூன்றாம்பேரர்
முக்கியமாம் போகரென்று மொழிந்திட்டேன்யான்
கொந்திட்டுக் கொடுமூலர் பேரனென்றால்
குளிகையுட குணபாட்டைக் காட்டென்றாரே.

காட்டென்று சொல்லிடவே குளிகைதன்னைக்
கடலில்விட்டுச் சங்கிலியைப் பிடித்தேன்யானும்
ஓட்டென்று யோசனையாந் தூரந்தானும்
உறக்குடித்து மண்தெரியப் பள்ளமாச்சு
நாட்டென்று யெல்லோரும் நடுநடுங்கி
நமக்கெல்லா மாக்கினைதா னேருமென்று
மூட்டென்று மனம்போலே யாகவென்று
மூனிந்துமே தெண்டனிட்டு மொழிந்தார்காணே.

காணவே சரபியென்ற குளிகைதன்னைக்
கசகாமல் சங்கிலியில் கயறுகட்டி
பூணவே முன்குளிகை தன்னில்விட்டேன்
முதிர்ந்துநின்ற குளிகையைத்தான் ¶ சரபிதிண்டி
தாணவே தண்ணீரெல்லாங் கக்கிமுன்போல்
சமரசமாங் கடல்யெப்போ தும்போலாச்சு
ஆணவே யெந்தனையு மடிவணங்கி
அஞ்சல்பண்ணிக் குளிகையொன்று கேட்டிட்டாரே,

கேட்கவே குளிகைபண்ணித் தாரேனென்று
கெட்டியாந் தேங்காயின் குடுக்கைதன்னில்
வேட்கவே வேணுமென்ற சூதந்தானும்
விரைந்துகொடுத் தஞ்சலிதான் செய்துநின்றார்
வாட்கவே மண்டலத்தில் குளிகைகொண்டு
வாருமென் றடிதொழுது அனுப்பிவிட்டார்
தாட்கவே சமுத்திரத்தைத் தாண்டிப்பின்பு
சாங்கமாய்ப்பொதிகைக்கீழ் தரித்திட்டேனே. (287)

¶ சரபி—கெந்தகம்.



## பூனை நான்குவேதம் சொன்னது.

தரித்திட்டுப் பானமொடு சமைத்துமுண்டேன்
தாகித்துத் தண்ணீர்தான் தேடிக்கொண்டு
விரித்திட்டு § விப்பிராள் வீதிசென்றேன்
வேதந்தான் ஓதிவெகு விப்பிராள்தான்
குரித்திட்டுச் சொல்லையிலே தண்ணீர்கேட்டேன்
துற்கெந்தம் வீசுதென்று பார்ப்பாரெல்லாம்
அரித்திட்டு ஆத்துக்குள் போய்விட்டார்கள்
ஆத்திரமாய்ப் பூனையொன்று அழைத்திட்டேனே. (288)

அழைத்திட்ட பூனைதனக் குபதேசித்து
அருள்செய்யப் பூனையது நான்குவேதம்
பழைத்திட்ட பார்ப்பார்போல் தீர்க்கமாக
படித்தவன்போல் நால்வேதம் பகரும்போல
சழைத்திட்ட பார்ப்பார்க ளோடிவந்து
சாங்கமாய்த் தெண்டனிட்டு அஞ்சல்பண்ணி
பிழைத்திடவே அடியேற்குப் புத்தியென்ன
போதிப்பீ ரென்குருவே போதிப்பீரே. (289)

குருவென்றே தாகத்துக் கமுதமீய்ந்தார்
கொண்டுமே வஸ்துவொடு சத்திரீய்ந்து
அருவென்றே பாத்திரங்க ளீந்துமீய்ந்து
ஆயிபுட உபதேச மனுக்கிரகித்து
தருவென்றே அவரவர்தன் வீட்டிலுள்ள
தவலைசெம்பு மண்வெட்டி உழவுபாரை
வெருவியென்ற வேளைதனில் குவிக்கச்சொல்லி
விராட்டியது தனையடுக்கி நெருப்பிட்டேனே. (290)

இட்டுமே சிவந்தபின்பு கொண்டுவந்தசூதம்
எவ்வளவு யெடுத்துமே நிலைவீச
கட்டுமே † கனகந்தான் பத்தரையுமாச்சு
கணக்காக அவரவர்க ளெடுத்துக்கொண்டார்
கெட்டுமே குளிகையிட்டுக் கெவுனமாகி
கெடியான பொதிகைக்கு நிருதிமூலை
துட்டுமே சுணங்கவிருட்ச மரத்தின்கீழே
சோதியாம் பருவதமுங் கிட்டத்தானே. (291)

§ விப்பிராள்—பிராமணாள்.

கிட்டவே பிள்ளைகளை வைத்துக்கொண்டு
கெடியான குளிகைகளைப் பண்ணிப்பண்ணி
தட்டவே சாரணையைத் தீர்த்தபின்பு
சாங்கமாய்ச் சூதமெல்லாங் குகையில்வைத்து
எட்டவே குளிகைதனை யெடுத்துக்கொண்டு
ஏற்றமாங் குளிகையிட்டுக் கெவுனமாகி
உட்டவே ரோமபுரிக் கடலில்வந்து
உதுட்டான சித்தனைத்தான் கண்டிட்டேனே. (292)

கண்டிட்டேன் யெழுந்திரிந்து அஞ்சல்பண்ணி
கருத்தோடே மனமொன்றிக் கருணைகூர்ந்து
அன்றுரைத்த மொழிப்படியே வந்திரையா
அடியேன்தான் செய்தபிழை பொருத்திடென்று
பண்டுரைத்த மொழியெனக்குச் சந்தோஷமாச்சு
பாங்கான ‡கூபத்தைப் பத்திரமாய்க்காத்து
தொண்டுபட்டுச் சிவனுக்குச் சேதிசொல்லு
சொரூபமாங் குளிகையொன்று சூட்டினேனே. (293)

சூட்டியே கைகொடுத்து வகையுஞ்சொல்லி
சூதத்தின் திறமையைத்தான் சோதித்துக்காட்டி
ஓட்டியே ஒருவருக்குங் கொடாதேயென்று
உண்மைசொல்லிக் குடுக்கைதனில் சூதம்வாங்கி
ஆட்டியே அவிடம்விட்டு அனுப்பிக்கொண்டு
அய்யர்நந்தி பதம்பார்க்க அண்டத்தேறி
நாட்டியே நூற்றறுபதா மண்டத்தில்
நந்தியடி தனைப்போற்றி நாடினேனே. (294)

நாடினேன் குளிகைக்கு வயனமெல்லாம்
நந்திசொல்லக் கேட்டுமே மனமகிழ்ந்து
ஆடினே னவிடம்விட்டுப் பொதிகைக்கப்பால்
ஆதியா மரசடியில் பாட்டர்பாதம்
ஊடினே னிணையடிக்கீழ் சரணம்பண்ணி
உற்பனங்கள் குளிகைதனக் குரையென்றேனன்
பாடினேன் பாட்டர்மன மகிழத்தானும்
பாங்கான கருணையினு லுரைசெய்தாரே. (295)

‡கூபம்—கிணறு



செய்கின்ற வகைகளெல்லாந் தீர்க்கமாகச்
செப்பியபின் கேட்டுமே மனமகிழ்ந்து
பைகின்ற பாட்டரைத்தா னனுப்பிக்கொண்டு
பயின்றெடுத்த காலாங்கி அய்யர்பக்கல்
தைகின்ற பாதத்தைச் சரணம்பண்ணிச்
சாங்கமாய்க் குளிகைசெய்யுந் தன்மைகேட்டு
கைகின்ற கருவெல்லாங் களங்கமில்லாமல்
கருத்துரைத்துக் கேட்டுமே களிகூர்ந்தேனே. (296)

களிகூர்ந்து அய்யர்பதம் பணிந்துநிற்கக்
கடாட்சித்துக் குளிகைதனைக் கட்டுமென்றார்
அளிகூர்ந்து அய்யரைத்தா னனுப்பிக்கொண்டு
அதீதமாஞ் சுணங்கவிருட்ச மரத்தின்கீழே
எழில்கூர்ந்த சாஸ்திர மேழாயிரத்தை
எடுத்துமே சோதித்து ஒவ்வொன்றாக
வழிகூர்ந்து ஆயிரமா மாத்துமட்டும்
மருவிநன்றாய்ச் சோதித்த மார்க்கந்தானே (297)

மார்க்கமாய்க் குளிகையது ஆயிரத்தியெட்டு
வகையாகப் பண்ணியே சாரணையத்தீர்த்து
ஆர்க்கமாய் ஆயிரத்தெட் டண்டமெல்லாம்
அமர்ந்தங்கே யிருந்திருந்து அதீதம்பார்த்து
தார்க்கமாய் ஏழுகடல் தன்னைச்சுற்றிச்
சமர்த்தான மூலிகையைத் தின்றபின்பு
தீர்க்கமாய்ச் சமாதிதனி லிருந்துகொண்டு
செயலறிந்தேன் கற்பாந்த காலந்தானே. (298)

கற்பாந்தஞ் சமாதியிலே யிருந்திருந்து
கருத்தறியாப் பிள்ளைகளுக் குபதேசித்து
விற்பாந்த மேதினிக்குள் ‡மேருவலம்வந்து
விடுபட்ட நதிகளெல்லாம் பார்த்துத்தேறி
வற்பாந்த உன்மனைத்தாய் வஸ்துயீய்ந்து
மார்க்கமெல்லாந் தாய்சொல்ல மறந்திடாமல்
குற்பாந்த குளிகையது ஆயிரத்தியெட்டு
கொடிகட்டி மலைமுழைஞ்சில் குறித்திட்டேனே. (299)

‡ மேரு—மலை

குறித்திட்ட குளிகைதனை மலைமுழைஞ்சில்வைத்துக்
கொடிக்கட்டி ஜெயஸ்தம்பம் கூறினேனான்
பறித்திட்ட பிள்ளைகட்குக் குளிகையீய்ந்து
போாக அங்கங்கே மடமுண்டாக்கி
பறித்திட்ட சோடிட்டுக் கெவுனந்தன்னில்
பாய்ந்துமே அண்டரண்ட பதங்கள்பார்த்து
அறித்திட்ட ஐந்துவரை தாண்டியேறி
ஆயியுட சிலம்பொலியில் மேவினரே. (300)

மேவியே சிலம்பொலியைக் கேட்டுநின்று
மீறிவந்த விடுக்கான சிடர்தாமும்
தாவியே நூல்படித்துத் தாட்சியாகி
சுமரசமாங் குணமுண்டாய் தற்கமில்லை
பாவியே குளிகையுட யருவமெல்லாம்
பயிற்றுவித்தேன் ஆயிரமா மாற்றுமட்டுக்
தாவியே நூல்தனிலே ‡ சாங்கமாகச்
சமர்ப்பித்தேன் எழுஆ யிரந்தான்காணே. (301)

காணவே யிந்தமுறை செய்வதாரு
கருந்தாகச் சாஸ்திரத்தை நம்பினோர்கள்
பூணவே சிவயோகி ரிஷிகள்சித்தர்
புகழாகத் தரிக்கலாங் குளிகைதன்னை
வாணவே வாசிகண்ட ஞானிக்குத்தான்
வாமத்தே நின்றுரைத்த பூசையோர்கள்
வேணவே வெகுகாமி பெண்ணாசைகொண்டோன்
மிகையாகி கோபெய்தி மாள்வான்தானே. (302)

மாளாதே தினந்தோறுங் கற்பமுண்ணு
மங்கையர்பால் மனஞ்சற்று மருவிடாதே
கேளாதே யாரையுந்தான் வயிரமுண்ணு
கெட்டியா முடலிறுகி நரையோமாறும்
தாளாதே நோய்களெல்லாந் தலைகெட்டோடும்
தங்கம்போல் தேகமெல்லாஞ் சிவப்பதாகும்
தூளாதே மலைசிதறுங் கையால்குத்தில்
துப்புரவாய் வாசியது சோர்ந்தாடாதே. (303)

‡ சாங்கமாக—ஒழுங்காக



## கெந்தகச் சத்து.

ஆடாதே கெந்தகத்தின் சத்துக்கேளு
அழுத்தமாம் நெல்லிக்காய்க் கெந்தகந்தான்
எடாதே யிரண்டுபத்துப் பலந்தான் தூக்கு
ஏற்றமாங் குறட்டையுட பழமும்போடு
கோடாதே கொன்றையுட பழமும்போடு
கொடியான முசுமுசுக்கைப் பழமும்போடு
பாடாதே அமுக்கிருப் பழமும்போடு
பாங்கான தக்காளிப் பழமும்போடே. (304)

போடவே ஓரிதழ்த் தாமரையுங்கூடப்
புகழ்கண்டங் கத்திரியின் பழமுந்தானும்
தேடவே சிவக்குகின்ற மாம்பழத்தின்தோலும்
தேன்வெண்ணெய் ¶ குன்றிவெல்லம் பலமோரெண்டு
பாடவே வெங்காரம் பலமும்பத்து
பாங்காக அரைத்தொன்றாய் வில்லைகட்டி
வாடவே வங்கமென்ற நாளத்தூது
மணிமணியா யிறங்கியே சத்துமாமே (305)

சத்தெல்லாம் நொறுக்கியே யெடுத்துக்கொண்டு
தாக்கிநின்ற கறடெல்லாம் அரைத்துவைத்து
பத்தெல்லாம் பொறுக்கியே உருக்கிக்கொண்டு
பாங்காக அப்பிரேகஞ் சாய்த்தாய்போலே
முத்தெல்லா மூலைவைத்து உருக்கிச்சாய்த்து
மூனைந்தசத்து நாலுக்கு ஒன்றுதங்கம்
மெத்தெல்லா மெழுகுகட்டிக் கிண்ணிவார்த்து
மேலாகச் சூதமிட்டுத் தங்கம்போடே. (306)

போட்டுமே திரிகுணசல் சவ்வீரங்கூட்டிப்
புகழான பொற்றலையின் சாற்றாலாட்டி
ஆட்டுமே அயத்துடுப்பால் கிண்டிக்கிண்டி
அருணன்போல் செந்தூர மானபின்பு
ஓட்டுமே ஒன்பதிலும் ஆயிரத்தொன்றோடும்
உற்பனமா யிருபத்து ஐந்துமாற்று
காட்டுமே செந்தூரம் வீசமிடையுண்ணு
கனகம்போல் கண்கூசுங் காந்திதானே. (307)

¶ குன்றி—குன்றிமணி

காந்தியாஞ் சத்தெடுத்துக் காரமிட்டுக்
காந்தத்தை யிடைக்கிடைதான் சேர்த்துக்கொண்டு
வாந்தியாம் வங்கமென்ற காளத்துாது
மாசற்று அருணன்போல் ரவியுமாகும்
சாந்தியாந் தங்கமது ஆயிரத்தில்
தாக்கினல் நவலோகம் செம்புமாகும்
ஏந்தியா மிச்செம்பு மதியிற்தானும்
யீரிரண்டு ஆயிரத்தில் செம்புமாமே. (308)

## சோழன் நடேசர் சிலை செய்தது.

செம்பான மதிதன்னை ஆயிரமாமதியில்
சேர்க்கவே யொன்றுதான் கனகம்பத்தாம்
அம்பான அம்பலத்தில் நடேசரைத்தான்
ஆனந்த நிருத்தராய் வார்க்கச்சொல்லி
கம்பான ஆயிரஞ்சேர் கனகமீய்ந்தார்
கருந்துரைத்துச் சோழனென்ற ராசன்றானும்
தெம்பான சிற்பருக்கு அதிகவிர்த்திச்
சிலவுகொடுத் தனுப்பியே செய்யென்றாரே. (309)

செய்யென்று சோழனென்ற ராசன்தானும்
சிற்பருக்குக் காவலாய் மனிதர்வைத்து
வெய்யென்று கேட்டதெல்லாங் கொடுக்கச்சொல்லி
வேலைக்கு மனிதரைத்தான் விரைந்துவைத்தான்
மெய்யென்று சிற்பருந்தான் மேன்மையாக
வெண்மெழுகு கருமெழுகு விரைந்தெடுத்து
தெய்யென்று § நிருத்தமிட்ட நடேசரைப்போல்
சமைத்துமெழு கதனுல்மண் கட்டினாரே. (3.0)

கட்டியோர் மண்காய வைத்தபின்பு
கருக்காய்ச்சிக் கனகத்தை உருக்கிவார்த்தார்
எட்டியே பாயாம விடிந்துபோச்சு
யிப்படியே கருக்கட்டி யேழுதரம்வார்த்தார்
ஒட்டியே சிற்பருந்தான் வார்க்கவார்க்க
உருக்குலையச் சிற்பருந்தான் ஒடுக்கமாகி
அட்டியே சிற்பருந்தான் கிலேசமுற்று
அதிக ஆலோசனையாய் அயர்ந்திட்டாரே (311)

§ நிருத்தம்—நடனம்



அயர்ந்திட்ட சொற்பனத்தில் நடேசமூர்த்தி
ஆண்டியொரு சந்நியாசி அந்திப்போது
உயர்ந்திட்ட உங்கள்பக்கல் வந்தபோது
உன்மனதின் துயரத்தை நீக்குவார்பார்
துயர்ந்திட்ட சொற்பனத்தில் சொல்லிப்போட்டு
திருமூலர் தனையழைத்துக் கடுகநீபோய்
வியர்ந்திட்ட விக்கிரகம் வார்ப்பதற்கு
விரைந்துநீ வார்த்திடென்று சொன்னார்காணே. (312)

சொன்னதோர் அனுக்கிரகப் பலத்தினாலே
திருமூலர் சிற்பரண்டை வந்துநின்று
பன்னதோர் பசியாலே யிளைப்புமெத்த
பண்பாக அன்னமிடப் பண்ணுமென்றார்
தென்னவே சிற்பருந்தான் உன்பாடுஉனக்கு
செயலழிந்து கிடக்கின்ற பாடெனக்கு
அன்னதோர் ஆண்டி நீ போடாவென்றார்
அதிலொருவன் சொற்பனங் கண்டோன்தானே. (313)

தானென்ற அய்யாண்டை வந்துநின்று
சாஷ்டாங்கம் பண்ணியே யென்னசொல்வான்
நானென்ற நடேசர்விக் கிரகம்வார்த்தோம்
நலமாக உருவாக வில்லையையா
ஏனென்ற ஏழுதரம் வார்க்கவார்க்க
யிடஞ்சலாய்ப் போகுதென்ன செய்வோமென்றார்
ஆனென்ற ஆண்டியொரு காசளவுசெம்பு
அதில்போட்டு வார்த்திடென்று யீய்ந்திட்டாரே. (314)

ஈய்ந்திட்டுப் போனபின்பு தங்கத்திலிட்டு
எழிலாக உருக்கியே கருவில்வார்த்தார்
பாய்ந்திட்டு நடேசர் விக்கிரகமாச்சு
பயந்தீர்ந்து சிற்பருஞ் சந்தோஷமாகி
தோய்ந்திட்டு யிருக்கையிலே சோழன்வந்தான்
சிற்பரெல்லாந் திரள்கூட்ட மாகநிற்கில்
வாய்ந்திட்டு விக்கிரகம் வார்த்திட்டாயோ
வகைகேட்க மனமகிழ்ச்சி யாய்ச்சொன்னாரே. (315)

சொன்னதொரு மொழிகேட்டுச் சோழன்தானும் -
சீக்கிரமாய்க் கருவண்டை வந்துபார்த்து
உன்னமொழி உளியாலே சீவிடென்றார்
உற்றுமே பார்ப்பளவிற் செம்பதாச்சு
தன்னமொழி தங்கமெல்லாந் திருடிக்கொண்டு
சாதகமாய்ச் செம்பாலே வார்த்தாய்நீயே
அன்னமொழி உள்ளதைநீ சொல்வாயென்று
அதட்டியே ஆக்கினையாய்க் கேட்டிட்டானே (316)

கேட்டுடனே எழுந்திருந்து அஞ்சல்பண்ணி
கெட்டியாய் ஒருகாசு மெடுக்கவில்லை
வாட்டுடனே உள்ளபடி ஆறுலொன்று
உண்மைதான் சொல்லுகிறேன் கேளுமையா
வேட்டுடனே விக்கிரகம் வார்க்கவார்க்க
‡வின்னமாய்ப் போகுதென்று நாங்களெல்லாம்
மாட்டுடனே மனக்கிலேச மாகும்போது
மகத்தான சொற்பனந்தான் கண்டிட்டேனே. (317)

சொற்பனந்தான் யென்னவென்று கேட்பீராகில்
சிவவேடத் தாண்டியவன் வருவானோ
உற்பனந்தா னவர்சொல்லே உறுதியாக
உண்மையாய்க் கேட்டாக்கா லுருவாமென்றார்
அற்பனந்தான் ஆண்டியுமப் படியேவந்தார்
அவர்கொடுத்தார் காசிடைதான் செம்புதானும்
விற்பனந்தான் கூடயிட்டுக் கருவைவார்த்தோம்
வேறொன்று மில்லையுண்மை விசேடந்தானே (318)

விசேடந்தா னிம்மட்டு மென்றுசொல்லி
மிடுக்கான சிற்பருந்தான் உண்மைசொன்னார்
திசேடந்தான் பொன்னெல்லாந் திருடிக்கொண்டு
திடமான மாறுட்டம் பண்ணுகின்றார்
அசேடந்தா னாக்கினைகள் பண்ணச்சொன்னார்
அடங்கலுந்தா னாலயத் திருக்கும்போது
நிசேடந்தான் ஆண்டியவன் வந்தானப்போ
கோமென்ன சிற்பரின்மேல் சொல்லென்றாரே. (319)

‡ வின்னமாய்—பங்கமாய்



சொல்லென்று சொன்னமொழி கேளுமையா
சுயமாக விக்கிரகம் வார்க்கச்சொன்னோம்
தல்லென்று தங்கத்தை யெடுத்துக்கொண்டு
தனுக்கான செம்பாலே வார்த்தானென்றார்
செல்லென்று சிற்பருந்தான் திருட்டுவித்தை
செய்யார்கள் நிசஞ்செய்வா ரென்றுசொல்லி
வெள்ளென்று வெள்ளியைத்தா னுருக்கச்சொல்லி
விக்கிரகத் தனைச்சிவி மேல்போட்டாரே (320)

போட்டிடமூ வாயிரத்தில் காணிதானும்
பொருந்தியதோர் வெள்ளியெல்லாந் தங்கமாச்சு
கோட்டிடவே திருமூலர் குளிகைபோட்டு
கொடுவேகங் கெவுனத்தில் மறைந்துபோனார்
மாட்டிடவே சோழன்மெத்த மனமகிழ்ந்து
மருவியே தவசியைத்தான் தேடிப்பார்த்தான்
காட்டிடவே காணாமல் காதாக்கள்மகிமை
கரைகண்டு சொல்வதற்குக் கண்கொள்ளாதே. (321)

கொள்ளாதே சிற்பருக்குக் கோடிகோடி
குறிப்பான வெகுமான மெல்லாமீய்ந்து
விள்ளாதே ஒருவருக்கும் விக்கிரகமகிமை
விரைந்துமே சீக்கிரத்தில் தீருமென்று
துள்ளாதே சோழருந்தான் விடுதிக்குப்போனார்
சிற்பருந்தான் சீவையிலே உளிகளெல்லாம்
புள்ளாதே பொறிந்துமே தேய்ந்துபோகும்
போராடிச்சிவியெல்லாங் கெட்டித்தாரே. (322)

கெட்டித்துச் சாஸ்திர நிர்ணயப்படிக்கு
கெடியாக ‡மூர்த்திகர மாக்கிவைத்து
தட்டித்துச் சோழருக்குச் சேதிசொல்லி
சிறப்பாக வெகுமானம் பெற்றுமீண்டார்
திட்டித்துக் கெந்தகத்தின் மகிமைசொல்ல
சித்தமகிழ்ந் துத்திகுளிர்ந் துடல்பூசித்து
இட்டித்துக் குளிகையது கைக்குள்ளாச்சு
ஏறலா மண்டரண்ட பதமுந்தானே. (323)

‡ மூர்த்திகரம்—தெய்வீகம்.

தானென்ற செம்பாலே குளிகைபோடத்
தனித்ததோர் கோடாங்கள் கட்டிப்பண்ணு
கோனென்ற குண்டலங்கள் பவுத்திரங்கள்
குறியான மோதிரங்கள் ‡மாத்திரைக்கோல்
காவென்ற கைவளையல் உள்கட்டுக்குவளை
கடியதோர் ஆபரணங் கனமாய்ப்பண்ணு
தேனென்ற செம்புதனைச் செந்தூரித்துண்ணு
சிறப்பாகச் சட்டைகக்கிச் சிவப்புமாமே. (324)

### கெந்திச்செம்புச் செந்தூரம்.

ஆமென்று முன்னெடுத்த கெந்திச்செம்பை
ஆச்சரியம் புளியிலைபோல் தகடுதட்டி
தோமென்று சுத்தித்த ரூகமொன்று
சுத்தியாம் லிங்கமொன்று காரமொன்று
வாமென்ற மனோசிலையு மொன்றுகூட்டி
வாய்நீரால் மத்தித்துத் தகட்டில்பூசி
போமென்ற புடம்போடச் செந்தூரமாகும்
பொருந்தியே விசயிடை தேனிலுண்ணே. (325)

தேனிலுண்ண நோய்மூன்றுஞ் சிதறியோடும்
சிந்துமே தாரைபோ லமுர்தந்தானும்
பாலிலுண்ண ஆரிபதம் பரிந்துகாண்பாய்
பராபரத்தாய் கேட்டதெல்லாம் பாலிப்பாள்பார்
வனிலுண்ண வாசியெல்லா முள்ளொடுங்கும்
உடுநியா முகாந்தவரை சடமுந்நிற்கும்
கானிலுண்ணக் காயமது இரும்புத்தூணும்
கற்பாந்த காலமெல்லாங் கடிகையாமே. (326)

கடிகையாஞ் சிவயோக ஞானிக்குத்தான்
காமாந்தர் கண்கெட்டுக் கடிகைமாள்வார்
குடிகைதான் வாமிக்காம் வாதிக்காகும்
குடிகெட்ட பொய்யருக்குக் கூறொண்ணாது
படிகையாம் வேதாந்த பதத்தைசித்தம்
பாங்காகக் கைபிடித்தோன் சித்தனாவான்
மிடிகையா மிலேச்சருக்குக் கொடுத்தால்பாவம்
மிகையாகி வெறுமையினால் மாள்வான்தானே (327)

‡ மாத்திரைக்கோல்—யோகத்தண்டு, வாசிக்கோல்



மாளாதே யிருக்கவல்லோ கற்பஞ்சொன்னேன்
மாண்டிறந்து போகுதன்றோ மனுஷமாடே
கேளாதே மற்றொன்றும் காதில்தானும்
கிளியென்ற சிலம்போசை காதிற்கேளு
தாளாதே யங்கோரஞ் சமாதியிலேநில்லு
சகலசெந்து சீவனையும் தன்னுயிர்போலெண்ணு
வாளாதே சித்தர்தனை வகைகள்கேளு
வளப்பமெல்லா முப்பாலே மகிழ்ந்துபாரே. (328)

யாரென்ற காயசித்தி உப்பினாலே
பறந்தோடுங் குளிகையெல்லா முப்பினாலே
வாரென்ற வாதமெல்லா முப்பினாலே
வாசியுள்ளே ஆடுவதும் உப்பினாலே
ஆரென்ற புட்செயமும் உப்பினாலே
பொன்னேடிப் பழுத்ததுவு முப்பினாலே
ஆரென்ற ‡அஷ்டாங்கம் உப்பினாலே
அதீதமா முப்பாலே யெல்லாமாச்சே. (329)

ஆச்சென்ற உப்பறிந்து கொண்டோன்வாதி
ஆங்கார வைம்புலனை அறுத்தோன்யோகி
நீச்சென்ற ஆறுதல முருவியேறி
நிராதார மாறையுந்தா னறிந்தோன்ஞானி
கூச்சென்ற குளபதத்தில் அமுதவாரி
கொள்கியே பாணித்தோன் குருவுமாகும்
பீச்சென்ற விடங்கண்டு சிகாரத்தீயைச்
சேர்த்திட்டோன் பிறவிலை யறுத்தோன்காணே. (330)

காணவே கற்பங்க ளுண்ணும்போதும்
கனமான யோகங்கள் பார்க்கும்போதும்
வேணவே வெகுபாடாய் வெறுத்துக்காணும்
மீளாதே மனத்திடமாய் மீறிப்பாரு
வணவே உளமகிழ்ச்சி அநேகங்காணும்
உற்றுமே பிடித்ததெல்லாஞ் சித்தியாகும்
பூணவே வாதத்தி னதிசயங்கள்
அடங்காது எடுத்தனில் முடிவாகாதே. (331)

‡ அஷ்டாங்கம்—எட்டுவித யோகங்கள்.

ஆகாத மனந்தன்னை மறித்துவெட்டி
    அஞ்சரு வாணியைப்போல் அடித்துவுன்னு
போகாத பொறிவழியே போகும்பெண்ணை
    பின்துடர்ந்து மாயாதே காமத்தீயால்
சாகாத காலேது வென்றுபாரு
    தைரியமாய் வேகாத தலையைப்பாரு
ஏகாத யெவ்வுயிருந் தன்னுயிர்போலெண்ணு
    யேதேது விக்கினமு மிழந்துபோடே. (332)

இழந்திட்டுச் சமாதியிலே யிருந்துகொண்டு
    யெளிதாகக் கற்பத்தை யிடாகலுண்ணு
உழந்திட்டு ருசிதன்னை ஒழித்துப்போடு
    உத்தமித்தாய் பதம்போற்றிப் பானம்பண்ணு
வழந்திட்டு வாதத்தை வரிசையாக
    வயணமா யடிதொடுத்து உயரயேறு
கழந்திட்டுக் கைமுறைகள் கழுவிடாமல்
    காடியே சாஸ்திரத்தை கண்ருய்ப்பாரே. (333)

பாரென்றால் சும்மாதான் பார்க்கப்போமோ
    பராபரை யைப் பூசித்தாற் பார்க்கலாகும்
தூரென்றால் சாத்திரத்தை நிலைக்கொட்டாது
    சுத்தசை தன்னியமாம் தூலைப்பாரு
காரென்றால் வாசியைநீ மறந்திடாமல்
    காலுணி உரைத்தாக்கால் கருவெல்லாந்தோனும்
வாரென்றால் மாய்கையைத்தா னருந்திட்டாக்கால்
    வாராது நித்திரையும் பசியுஞ்சோம்பு. (334)

சோம்பலா யிருந்தாக்கால் காயசித்தியாமோ
    †சுணங்கனைப் திரிந்தாக்கால் வாதசித்தியாமோ
கூம்பலாய் மனம்போனல் யோகசித்தியாமோ
    குளிகைக்குச் சாரணைதான். தீராயானல்
ஆம்பலா யாகாச கெவனம்போமோ
    அடியான வழலைவிட்டால் சித்தனுமோ
காம்பலாய்க் காமத்தின் வழியேசென்றால்
    காலூன் றுஞ் சிவயோகக் கருக்குப்போச்சே (335)

† சுணங்கன் — நாய்.



கருத்தாகக் காயசித்தி பண்ணினுக்கால்
    கருதியே வாதத்தைச் சித்தியாக்கு
வருத்தாக வாதசித்தி கைக்குள்ளாக
    மகத்தான யோகத்தில் மனதைப்பூட்டு
உருத்தாக யோகசித்தி உரைத்துக்காண
    உற்பனமா மாயிபத முகந்துகாட்டு
திருத்தாகத் தேவிபதங் காணவென்றால்
    சத்தியொடு வஸ்துவைத்துத் தியானம்பண்ணே. (336)

பண்ணியே லகிரிகொண்டு மேல்மூலத்தில்
    பாவினைகள் பலதீபம் பலகாரங்கள்
உண்ணியே மனதொட்டி உமையாள்பாதம்
    உருகவே தம்பித்து விலங்குமாட்டி
அண்ணியே அர்ச்சனைக ளெல்லாம்பண்ணி
    அநேக சோடச உபசாரத்தால்தானும்
எண்ணியே மனதொன்றி யேகரித்து
    ஏற்றமாய் வாசிதன்னை யிருத்திடாயே. (337)

இருத்தியே வாசியினுல் பூசைபண்ணி
    எட்டெட்டு அறுபத்து காலுசித்து
வருத்தியே மனங்குவிந்தால் ஆயிபாதம்
    மறவாமல் மனதொன்றி வாசிமாட்டு
திருத்தியே †ஐம்புலனைச் சிதறவெட்டிச்
    சிக்காம லாசையென்ற பாம்பையொட்டி
பருத்தியே நூல்காய்த்துப் புடவையான்
    பான்மைபோல் பலன்பெறலா பாருதானே. (338)

பாரென்று யெனையாண்ட காலங்கிநாதர்
    பக்குவத்தி னுபதேசம் பண்ணிப்பின்பு
கோவென்று வாசியுட குறிப்புங்காட்டிக்
    குளிகையுட விதங்காட்டி வாதங்காட்டி
தீரென்று காயசித்தி சிறப்புங்காட்டிச்
    செயலான மனோன்மணியின் விலாசங்காட்டி
காரென்று சதாசித்தம் கேசரியத்தானும்
    கைநெல்லிக் கனிபோலே காண்பித்தாரே. (339)

†ஐம்புலன் — அறிவு, புத்தி, சித்தம், மனம், ஆங்காரம்.

காண்பித்த குருவான காலாங்கிநாதர்
கடாட்சத்தா லடியேனுங் கருத்துடன்னி
வண்பித்த யெழுகாண்டம் வாதஞானம்
வற்றமாங் காயசித்தி யோகசித்தி
கூண்பெற்ற குளிகைசித்தி கெவுனசித்தி
கூறுத மந்திரந்தான் சித்தியெல்லாம்
நூண்பித்த நூலினுட நுட்பமெல்லாம்
நுண்ணிமையாய்க் கருமறைப்பு சொல்விட்டேனே. (340)

சொல்லிவிட்டேன் காயசித்தி செய்யுமார்க்கம்
சோதித்து அடிதொடுத்து நுனிமட்டுக்ரும்
சொல்லிவிட்டேன் யோகசித்தின் பயிற்சியெல்லாம்
சுருதியா மனுபோகஞ் செய்தநேர்மை
சொல்லிவிட்டேன் சித்திக்க வழிவாங்கி
செயமான செந்தூரம் பண்ணுநேர்மை
சொல்லிவிட்டேன் காயசித்தி முந்நூறுஞ்சொச்சம்
திருபாடல் பாடினேன் செனிதானே. (341)

தானான கற்பமது முந்நூறுஞ்சொச்சம்
‡தாய்சொன்ன படியுண்டு சாதித்தேனான்
கோனான காலாங்கி நாயர்சொன்ன
குறிப்பெல்லாஞ் சோதித்துக் கொண்டமார்க்கம்
தேனான சிவயோக முனிவர்தானும்
சிறுபாட்டர் சொன்னபடி சித்தியானேன்
பானான பராபரமாந் திருமூலநாயர்
பாட்டர்சொன்ன படியின்றி முடித்திட்டேனே. (342)

‡ தாய்—கண்மணி.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 101430
LC
ЯЦЬ

போகர் கற்பம் முற்றிற்று.